www.janasakthi.in janasakthieditor@gmail.com janasakthi Tholaikatchi CPI Tamilnadu

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925-2025

மலர் 88 இதழ் 10 | 2025 ஜூன் 08 - ஜூன் 14 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15





# இடது ஜனநாயக முன்னணி அடுத்த தேர்தலிலும் வெற்றி பெறும்

## கேரளாவில் டி.ராஜா திட்டவட்டம்

**எல்.டி.எஃப்க்குள் உட்கட்சி ஜனநாயகம் இல்லை என்ற குற்றச்சாட்டுகளை நிராகரித்த அவர், கூட்டணி வழக்கமான விவாதங்கள் மற்றும் கூட்டு முடிவெடுப்பதன் மூலம் செயல்படுகிறது என்று கூறுகிறார்.**




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களை ஒட்டி, கேரள மாநிலம் திருச்சூருக்கு வந்த கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்தார்.

இடது ஜனநாயக முன்னணிக்குள் போதிய ஜனநாயகம் இல்லை என்ற குற்றச்சாட்டுகளை நிராகரித்த அவர், கூட்டணி வழக்கமான விவாதங்கள், கூட்டு முடிவுகள் அடிப்படை யிலேயே செயல்படுகிறது என்றார்.

"கருத்து வேறுபாடுகள் இயற்கையானவை. ஆனால் அவை மனம் திறந்த உரையாடல்களின் மூலம் தீர்வு காணப்படுகின்றன. அடுத்த தேர்தலிலும் நாங்கள் வெற்றி பெறுவோம், மாநிலத்தில் வரலாற்றை உருவாக்குவோம்," என்று அவர் கூறினார்.

"நாங்கள் ஒன்றையொன்று சார்ந்த கட்சிகளின் கூட்டணி. கருத்து வேறுபாடுகள் இயற்கையானவை, நம்மிடையே பரஸ்பர நம்பிக்கை, மரியாதை மற்றும் இணக்கமான மனப்பான்மை இருக்க வேண்டும்," என்று இடது ஜனநாயக முன்னணியின் உள் ஒற்றுமையை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

"பாசிச வலதுசாரி ஆட்சியை எதிர்ப்பது மட்டுமல்ல, அதனையும் தாண்டி, ஒரு நம்பகமான மற்றும் நிலையான அரசியல் சக்தியாக மக்களின் நம்பிக்கையை இடது ஜனநாயக முன்னணி பெற்றிருக்கிறது என்று அவர் வலியுறுத்தினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தலைவர்கள் மீது அமலாக்க இயக்குநரகம் பதிவு செய்த வழக்குகள் குறித்து பதிலளித்த அவர், "அரசியல் எதிரிகளைக் குறிவைக்க பாரதிய ஜனதா கட்சி, அரசியல் சாசனத்தின் படி உருவாக்கப்பட்ட நிறுவனங்களைத் தவறாகப் பயன்படுத்துகிறது" என்றார். இருப்பினும், "முதலில் இதுபோன்ற குற்றச்சாட்டுகள் ஏன் எழுகின்றன" என்பது குறித்துக் கட்சிகள் சுயபரிசோதனை செய்ய வேண்டும் என்றும்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## ஆபரேசன் சிந்தூர் குறித்து விவாதிக்க நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம்

# பிரதமர் மோடிக்கு 16 கட்சிகள் கடிதம்

**ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கைகள் குறித்து மக்களுக்கு விளக்கம் அளிக்க நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்டுமாறு பிரதமர் மோடிக்கு, 16 கட்சிகள் கூட்டாக கையெழுத்திட்டு கடிதம் எழுதியுள்ளன.**

இந்தியா கூட்டணியில் இடம்பெற்றுள்ள 16 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்ற கூட்டம் புதுடெல்லியில் ஜூன் 3 ஆம் தேதி நடைபெற்றது. இதில், காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, திரிணாமுல் காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதா தளம், சமாஜ்வாதி கட்சி, தேசிய மாநாட்டுக் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி (ஆர்எஸ்பி), விடுதலை சிறுத்தைகள் கட்சி, கேரள காங்கிரஸ், மதிமுக, சிபிஐ (எம்எல்) லிபரேசன் மற்றும் சிவசேனா (உத்தவ்) உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட 'ஆபரேசன் சிந்தூர்' நடவடிக்கை குறித்து, ஒன்றிய பாஜக அரசு நாட்டு மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும்; இதற்காக நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்துவது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. மேலும், இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி 16 கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக கையெழுத்திட்ட கடிதமும் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கூட்டத்திற்குப் பின்னர் காங்கிரஸ் மூத்த தலைவர் தீபேந்தர் ஹூடா செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது, "பகல்காம், ஆபரேசன் சிந்தூர், அமெரிக்காவின் போர் நிறுத்த அறிவிப்பு உள்ளிட்டவை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும். பயங்கரவாதத்தை ஒழிப்பது மற்றும் எதிர்கால உத்திகள் குறித்தும் நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும். தற்போது இந்திய அரசு தமது கருத்துக்களை உலக நாடுகளுக்கு எடுத்துரைத்து வருகிறது. இதேபோல், நாடாளுமன்றத்திலும் அரசாங்கம் விளக்கம் அளிக்க வேண்டும் என எதிர்பாக்கிறோம்" என்று தீபேந்தர் ஹூடா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி ராணுவ நடவடிக்கைகள் குறித்த உண்மை நிலையை ஒன்றிய அரசு விளக்க வேண்டும் என ஏற்கனவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி இருந்தது குறிப்பிடத்தக்கது.

### நூறுநாள் வேலைத்திட்டம்: 1.76 கோடி பேரை நீக்கிய மோடி அரசு

மகாத்மா காந்தி ஊரக வேலையுறுதித் திட்டத்திற்கு 2020-21 ஆம் நிதியாண்டில் 1 லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டபோது, 7.55 கோடி குடும்பங்கள் பயனாளிகளாக இருந்தன. ஆனால், 2024-25 ஆம் ஆண்டில், இந்தத் திட்டத்திற்கு 85 ஆயிரத்து 680 கோடி ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டது. இதற்கேற்ப பயனாளிகள் எண்ணிக்கையையும் 5.79 கோடி குடும்பங்களாகக் குறைத்துள்ளனர். ஒன்றிய அரசு பட்ஜெட் ஒதுக்கீட்டில் ரூ. 25 ஆயிரம் கோடி ரூபாயை குறைத்ததுடன், 1.76 கோடி குடும்பங்களையும் நீக்கியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

### ஆன்லைன் சூதாட்ட வழக்கு: தமிழ்நாடு அரசின் விதிகள் செல்லும் சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

தமிழ்நாடு சட்டப்பேரவையில் 2022 ஆம் ஆண்டு, ஆன்லைன் சூதாட்டத் தடை மற்றும் ஆன்லைன் விளையாட்டுகள் ஒழுங்குமுறைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பான விதிமுறைகள் இயற்றப்பட்டு அரசிதழிலும் வெளியிடப்பட்டது. இதற்கு எதிராக விளையாட்டு நிறுவனங்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்தன. இவற்றை விசாரித்து வந்த உயர்நீதிமன்றம் 6.4.2025 அன்று தீர்ப்பளித்தது. அதில், ஆன்லைன் விளையாட்டுகளுக்கு தமிழக அரசு விதித்திருந்த நேரக் கட்டுப்பாடு செல்லும் என நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ராஜசேகர் அமர்வு தீர்ப்பளித்தனர். மேலும் விளையாட்டு நிறுவனங்கள் தாக்கல் செய்த மனுக்களை தள்ளுபடி செய்தும் உத்தரவிட்டனர்.

### 2.5 கோடி போலி ஐஆர்சிடிசி கணக்குகள் முடக்கம்

இரயில் டிக்கெட்டுகள் முன்பதிவு 60 நாட்களுக்கு முன்பே தொடங்கினாலும் சில நிமிடங்களில் விற்றுத் தீர்ந்து விடுகின்றன. சில நிமிடங்களிலேயே பல லட்சம் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்துவிடுவதால் பயணிகள் பாதிக்கப்பட்டு வந்தனர். இது குறித்து ஐஆர்சிடிசி தொழில்நுட்ப வல்லுநர்கள் பகுப்பாய்வு செய்தனர். இதையடுத்து ஜனவரி மே மாதங்களுக்கு இடையே ரயில் டிக்கெட் முன்பதிவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட சுமார் 2.5 கோடி பயனர் ஐடிக்களை செயல் இழக்க செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் 20 லட்சம் பயனாளிகளின் ஐடிக்களை மறுமதிப்பீடு செய்துள்ளதாகவும் கூறியுள்ளனர்.

### பாலியல் குற்ற வழக்குகள்: விரைந்து விசாரிக்க மாதர் சம்மேளனம் வலியுறுத்தல்

சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட மாணவி அளித்த புகாரை, சென்னை மகளிர் நீதிமன்றம் 5 மாதங்களில் விசாரித்து தீர்ப்பளித்துள்ளது. இதனை வரவேற்றுள்ள இந்திய மாதர் தேசிய சம்மேளனம், இத்தகைய தீர்ப்புகள் நம்பிக்கையளிக்கும் வகையில் இருப்பதாகத் தெரிவித்துள்ளது. "இதேபோன்று நிலுவையில் உள்ள பாலியல் குற்ற வழக்குகளை விரைந்து விசாரித்து தீர்ப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

கட்சிக் கடிதம்



# சரடு விடுவதில் சளைக்காத மோடி

போர்க்குணமிக்க தோழர்களே!

**பெஹல்காம் சம்பவம் நடந்து மாதங்கள் உருண்டோடி விட்டன. பதில் தாக்குதலும் நடத்தப்பட்டு விட்டது. அந்நாள் முதல் இந்நாள் வரை பஹல்காம் தாக்குதல் குறித்து நாள் தவறாமல் மோடியும் அவரது சகாக்களும் பேசியே வருகின்றனர்.**

திரும்பத் திரும்ப இதனைப் பேசி வருபவர்கள் உண்மைகளை மட்டும் பேச மறுக்கின்றனர்.

நாட்டின் மீது தங்களை விடப் பற்றுள்ளவர்கள் யாரும் இல்லை என்பது போன்றும் ஆகச் சிறந்த தேச பக்தர்கள் தாங்கள்தான் என்பது போன்றும் ஒரு சித்திரத்தை உருவாக்கிடப் பெரும் முயற்சி மேற்கொள்கிறார்கள்.

பயங்கரவாதிகளின் தாக்குதலை இந்தியக் குடிமகன் எவர் ஒருவரும் நியாயப்படுத்தவோ, ஆதரிக்கவோ இல்லை.

ஒட்டுமொத்த தேசமும் பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிரான கண்டனத்தை வலுவாகவும், உறுதியாகவும், உண்மையாகவும் வெளிப்படுத்தினர் என்பதனை நிரூபிக்கச் சாட்சியங்கள் தேவையில்லை.

பிகாருக்குச் சென்ற பிரதமர் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்குப் பதிலடி இருக்கும் என்றார்.

அத்தகைய பதிலடி கொடுக்கப்பட்டதா? தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் பிடிபட்டார்களா? அல்லது கொல்லப்பட்டார்களா? என்ற வினாவிற்கு விடை உண்டா?

எல்லைப் பகுதியில் அவ்வப்போது ஊடுருவல்காரர்கள் தாக்குதல் தொடர்கின்ற நிலையில், பாதுகாப்பு பலப்பட்டிருக்க வேண்டாமா?




ஆகச் சிறந்த உளவுப் பிரிவுகள் என்ன செய்து கொண்டிருந்தன என்ற கேள்விக்கு உங்களின் நேர்மையான பதில் என்ன?

உளவுப் பிரிவின் தோல்விகள் என்று எடுத்துக் கொள்ளலாமா? நமது ராணுவத்தின் எதிர்த் தாக்குதல் குறித்து முன்கூட்டியே பாகிஸ்தான் நாட்டுக்குத் தெரிவிக்கப்பட்டதா என்ற கேள்விக்கு வெளியுறவு அமைச்சரும், பிரதமரும், உள்துறை அமைச்சரும் மவுனம் சாதித்தது ஏன்?

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பல்வேறு தரப்பினரும் தொடர்ந்து எழுப்பிய வினாக்களுக்குப் பதில் அளித்திட வேண்டிய நிர்பந்தங்களுக்கு வெளியுறவு அமைச்சர் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட பின்னர், பதில் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர்தான் பாகிஸ்தானுக்குத் தகவல் தரப்பட்டது என்று கூறுவது ஏன்?

பதில் தாக்குதல் நடத்திய பின்னர் நம் நாடு பாகிஸ்தானுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் என்ற அவசியம் ஏன் ஏற்பட்டது? என்பது குறித்து வெளியுறவு அமைச்சர் விளக்கமளிப்பாரா?

இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட மோதல், அணு ஆயுதப் போராக மாறிவிடக் கூடாது என்று நான்தான் போரை நிறுத்தினேன் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஒரு முறை அல்ல திரும்பத் திரும்ப ஒன்பது முறை கூறிவிட்டாரே? அதுதான் உண்மையா?

ட்ரம்ப் கூறுவது உண்மை அல்ல என்றால் நாட்டின் பிரதமர் மோடி இன்றுவரை மறுக்கவில்லையே ஏன்?

வர்த்தகத்தைப் பயன்படுத்திப் போரை நிறுத்தினேன், அதாவது இந்தியாவை மிரட்டிப் பணிய வைத்தேன் என்று டிரம்ப் கூறிவருவதும் இந்தியாவிற்கும் அமெரிக்காவுக்குமான வர்த்தகம் குறித்து சுமுகமான முறையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்று டிரம்ப் தெரிவித்து வருவதும் உண்மையா?

டிரம்பின் மிக நெருங்கிய நண்பரான மோடி இவைகள் குறித்தான உண்மைகளை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது நாட்டின் பிரதமர் என்கிற முறையில் அவரது தலையாய கடமை அல்லவா?

அத்தகைய கடமையை ஆகச் சிறந்த தேசபக்தராக தன்னைத்தானே அடையாளப்படுத்திக் கொள்ள முயலும், முயன்று வரும் மோடி மூடி மறைக்க முற்படுவது ஏன்?

மோதல்கள் நடந்த பின்னர் இருமுறை அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டது. கூட்டத்தைக் கூட்ட அமைப்பு விடுத்தது ஒன்றிய அரசு.

இருமுறையும் நடைபெற்ற கூட்டத்தில் தலைமை அமைச்சரான மோடி பங்கேற்காமல் பதுங்கியது ஏன்?

இக்கூட்டங்களில் பங்கேற்று நடந்த சம்பவங்கள் குறித்து விளக்கமளிக்க வேண்டியது பிரதமரின் தார்மீகப் பொறுப்பல்லவா?

தனது தார்மீகக் கடமைப் பொறுப்பில் இருந்து தவறியது ஏன்?

அவசரமாக நாடாளுமன்றச் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று, அனைத்துக் கட்சிகளும் நல்லெண்ணத்துடன் விடுத்த வேண்டுகோளைப் புறக்கணித்தது ஏன்?

நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க மறுத்துவிட்டு, உலக நாடுகளின் ஆதரவைத் திரட்ட தூதுக்குழுக்களை அனுப்பிட முடிவு செய்தது ஏன்?

யார் முக்கியம்? நாட்டு மக்களா? அல்லது உலக நாடுகளின் பல்வேறு தலைவர்களா?

நாம் நடத்திய எதிர்த் தாக்குதலில் நமது நாட்டு ராணுவத்திற்குச் சேதம் ஏற்பட்டதா? நமது இராணுவ விமானங்கள் சேதமடைந்தனவா? என்ற வினாக்களுக்கு ஒன்றிய அரசின் சார்பில் பதிலளிக்க மறுப்பது ஏன்? மறுப்பது மட்டுமல்ல, நமக்கு எந்தச் சேதமும் இல்லை. முழுக்க முழுக்க பாகிஸ்தானுக்கே சேதம். அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பில் இருந்து மீள்வதற்கு நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகும் என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறுகின்றார்.

நமது நாட்டிற்கு எவ்வித பாதிப்புமில்லை. நம் நாட்டுக்கு இராணுவத்திற்கு பாதிப்பு இல்லை எனத் திரும்பத் திரும்ப ஒன்றிய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் முப்படைகளின் தலைமைத் தளபதி அனில் சௌஹான் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு பாகிஸ்தானுடன் ஏற்பட்ட சண்டையின் போது போர் விமானங்களை இந்தியா இழந்ததை ஒப்புக் கொண்டுள்ளார்.

சிங்கப்பூரில் புளும்பெர்க் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ளார். யார் சொல்வது உண்மை? எவ்வித இழப்பும் ஏற்படவில்லை என ஒன்றிய அரசு கூறுவது உண்மையா? அல்லது முப்படைத் தலைமைத் தளபதி கூறுவது உண்மையா?

இவைகளுக்கு எல்லாம் எங்கே தீர்வு காண்பது?

நாடாளுமன்றம் என்று ஒன்று இருக்கின்றதே, அங்கே விவாதிக்க வேண்டாமா? நடந்த உண்மைகள் எதுவாயினும் அவை நாட்டு மக்களுக்குத் தெரிய வேண்டாமா?

உண்மைகளை எல்லாம் மூடி மறைத்து விட்டு, பேசியதையே திரும்பத் திரும்பப் பேசி மக்களின் கவனத்தை திசை திருப்ப முயல்வது ஏன்?

விலைவாசி உயர்வு, வேலையின்மை பிரச்சனைகள் தலைதூக்கி உள்ளன. மக்கள் துன்பத்தில், துயரத்தில் உள்ளனர். விலைவாசி வியர்வைக் கட்டுப்படுத்தவோ வேலையின்மையைப் போக்கவோ ஒன்றிய அரசு எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. மக்களின் பிரச்சினைகள் குறித்துக் கவலைப்படத் தயாராக இல்லை.

மக்களின் அப்பழுக்கற்ற தேசபக்த உணர்வை, தங்களுக்குச் சாதமாக்கிக் கொண்டு, தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள மோடி அரசு முயல்கின்றது.

பெஹல்காம் பிரச்சனையை முதன்மைப் பிரச்சனையாக்கி, தாங்கள் செய்து வரும் தவறுகளில், குற்றங்களில் இருந்து தற்காத்துக்கொள்ள, தப்பித்துக் கொள்ள மோடி அரசு முயல்கின்றது.

இம்முயற்சிகள் ஒருபோதும் வெற்றி பெறாது!

மீண்டும் சந்திப்போம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)

மாநிலச் செயலாளர்

# ‘வேடன்’ இசை வடிவில் ஓர் இடது குரல்



மு.வீரபாண்டியன்

**வேடன் கேரளாவின் ‘ராப் பாடகர்’. இவரது மேடைப் பாடல்கள் தனித்துவமிக்கவை. தானே பாடல் எழுதி தானே இசைத்துப் பாடுகிறார். இவரது பாடல்கள் கேரளா மட்டுமல்ல இந்தியா முழுவதும் பரவி வருகின்றன.**



இவரது இயற்பெயர் ஹிரன்தாஸ். அவர் தனக்குத் தானே சூடிக்கொண்ட பெயர் வேடன் என்கிறார். கடலில் மீன் பிடிக்கும் போது கைவில்லால் குறிபார்த்து மீன் மீது ஏவும் வில்லுக்கும் வேடன் என்ற பெயர் உண்டாம்.

யாழ்ப்பாணத் தாய்க்கும் கேரளத் தந்தைக்கும் பிறந்த எளிய இளைஞன் இவர். இவர் மேடை ஏறிப் பாடினால் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அலைமோதுகிறார்கள். ‘வாய்ஸ் ஆப் த வாய்ஸ் லெஸ்’ என்ற இவரது பாடலாகட்டும் மஞ்சும்மல் பாய்ஸ் சுதந்திரம் என்கிற பாடலாகட்டும் கேரளாவின் எட்டுத் திக்கும் தாண்டி இன்று நாடு முழுவதும் எதிரொலிக்கிறது.

‘இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு முகமை’மற்றும் இந்தியாவின் உள்துறை அமைச்சகம் இவரது பாடல்களை வரிக்கு வரி உற்றுக் கேட்கிறது. இவரை எப்படிக் கைது செய்வது எனச் சிந்தித்துக் கொண்டிருக்கிறது.

இவரைக் கைது செய்ய வேண்டும் என பிஜேபி பாலக்காடு கவுன்சிலர், உள்துறைக்கும் தேசியப் பாதுகாப்பு முகமைக்கும் கடிதம் எழுதி உள்ளார். கேரளாவின் ஆர்.எஸ்.எஸ் பி.ஜே.பி இவரை நாடு கடந்த தீவிரவாதி போல் பார்க்கிறது.

‘பூமி நான் வாழும் இடம்’ என்ற பாடலில் அவர் ஆதிக்க வர்க்கத்தைக் கேள்விக்கு உள்ளாக்குகிறார். இவரது பாடல்கள் ஒவ்வொன்றும் தலித் மக்கள் சிறுபான்மை மக்கள் உரிமைகள் மீது கட்டப்படுகின்றன.

பார்பலா மற்றும் சாதிய மேலாதிக்கச் சக்திகளைத் தோல் உரிக்கிறது. கடவுள் மற்றும் கோயில்களுக்கு மேல் நாடும் மனிதமும் எனப் பேசுகிறது. இதுதான் இந்து அடிப்படைவாதிகளுக்குக் கோபத்தை உருவாக்குகிறது.

சமீபத்தில் பாலக்காட்டில் இடது முன்னணியின் விழாவில் அவர் பாடும் போது லட்சக்கணக்கான மக்கள் அலைமோதினார்கள். அதிலும் இளைஞர்கள், படித்த அறிவு நிறைந்த இளைஞர்கள் இப்படி இந்த எளிய இளைஞனிடம் அலைமோதுவது ஏன்? அவன் எளிய கேரள மலையாள மொழியில் பேசுகிறான். அவனது மெட்டும் வார்த்தைகளும், விடுதலையின் பக்கமாகப் பேசுகிறது.


இது பொறுக்காமல் வேடனை வளரவிட்டால் அவனால் இந்து மதம் பிளவுபடுமாம். இந்து மதத்திற்குள் பிரிவினை தூண்டுமாம். எனவே தேசியப் பாதுகாப்பு வேடனைக் கைது செய்ய வேண்டுமாம்.

வேடன் பாடல்களில் சில நேரங்களில் சர்வதேசியம் வெளிப்படுகிறது. போரை வேடன் பாடல்கள் எதிர்க்கின்றன. அமைதியும், மனித நட்பும் கோருகிறது.

இங்கல்ல, உலகெங்கும் ராப் பாடல்கள் பெரும்பாலும் வெள்ளை இனத்தவர்கள்தான். குறிப்பாக அமெரிக்காவில் புகழ்பெற்ற AC/DC குயின் டென் டெல்லின் கன்ஸ், என்.ரோஸ் இப்படியாக புகழ்பெற்ற ராப் இசைக் குழு முழுவதும் வெள்ளையர்கள்தான்.

இதில் பிரம்மாண்ட திருப்புமுனை மைக்கேல் ஜாக்சன். இந்தக் கறுப்பினக் கலைஞன் மேடை ஏறிய போதுதான் பாப் இசைகளில் ஓர் புரட்சியே ஏற்பட்டது.

பாடிக்கொண்டே ஆடுவது ஆட்டத்தில் மகிழ்ச்சி மட்டுமல்ல கறுப்பின மக்களின் உரிமைக் குரலும் வெளிப்பட்டது. ஆதிக்கம், நிற பேதம், போர், சுரண்டல் என மானிட விரோதங்களை இவரது பாடல்கள் தோல் உரித்தது. இதனால் ஏராளமான சோதனைகளும் இந்த பாப் பாடகர் சந்திக்க வேண்டி இருந்தது.



எங்கேயும் ஆளும் வர்க்கமும், ஆதிக்கச் சக்திகளும் பாடல்களைக் கண்டு அஞ்சுகிறார்கள். கவிதைகளைக் கண்டு அஞ்சுகிறார், திரைப்பட நடிப்பைக் கண்டு அஞ்சுகிறார்கள், விளையாட்டு மற்றும் விளையாட்டு வீரர்களைக் கண்டும் அஞ்சுகிறார்கள். அதிலும் விளையாட்டு வீரர்களும், திரைப்பட நடிகர்களும், பாடகர்களும், கவிஞர்களும், எழுத்தாளர்களும் விடுதலையின் பக்கமும், சமத்துவத்தின் பக்கமும் நிற்கும் போது அவர்கள் குரல் இட்டதாக மாறுகிறது.

அவர்கள் இப்படித்தான். சாப்ளின் இப்படித்தான். முகமது அலி இப்படித்தான். பாப்லோ நெருடா இப்படித்தான். மைக்கேல் ஜாக்சன் இப்படித்தான். இந்த வரிசையில்தான் சப்தர் ஹஸ்மி வரவர ராவ், கத்தார், கோவன், தற்போது வேடன்.

அனைத்துக் குரலும் இடது குரல்தான். நிறைவில் இந்தக் குரல்கள்தான் வெல்லும்!

வேடன் வெல்லட்டும். வேடன் தோழன். ■

## இடது ஜனநாயக முன்னணி...

◀◀ 1 ஆம் பக்க தொடர்ச்சி

கருத்து தெரிவித்தார்.

கேரளா மாநிலம் தொடர்ந்து மக்கள் நல்வாழ்வு அக்கறை கொண்டு திட்டங்களை நிறைவேற்றுவதாகவும், மக்கள் நலனை மேம்படுத்துவதில் ஒரு முன்மாதிரியாக நாட்டை வழிநடத்தி வருவதாகவும், மீண்டும் மக்கள் அதனையே தேர்ந்தெடுப்பார்கள் என்றும் கூறினார்.

வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, வீட்டுவசதி மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான இடது ஜனநாயக முன்னணியின் தொடர்ச்சியான போராட்டம் மக்களால் அங்கீகரிக்கப்படும் என்று டி.ராஜா நம்பிக்கை தெரிவித்தார்.

வேலையின்மை, வறுமை மற்றும் விவசாய நெருக்கடி போன்ற அழுத்தமான பிரச்சினைகளிலிருந்து பொதுமக்களைத் திசைதிருப்ப, பிரதமர் நரேந்திர மோடி ‘ஆபரேஷன் சிந்தூர்’ போன்ற இராணுவ நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதாகக் குற்றம்சாட்டிய அவர், ஆனால் இதுபோன்ற உத்திகள் மோடியைத் தேர்தலில் காப்பாற்றாது” என்றும் கூறினார்.

“அரசாங்கம் இந்த நடவடிக்கையை வெற்றியாகக் கொண்டாடி வரும் போதிலும், பல முக்கியக் கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுக்கிறது. பயங்கரவாதிகள் நாட்டிற்குள் ஊடுருவி, 26 பொதுமக்களைக் கொன்று, ஒரு தடயமும் இல்லாமல் தப்பித்தது எப்படி? என்ற கேள்விக்கு ஏன் இந்தியப் பிரதமர் பதிலளிக்கவே இல்லை”.

வணிக அழுத்தத்தின் மூலம், இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போர் நிறுத்தத்தை மத்தியஸ்தம் செய்ததாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பலமுறை கூறுகிறார். இவ்வாறு பகிரங்கமாக அவர் பேசிய போதும், டிரம்பின் கூற்றுகளை, மோடி ஒப்புக்கொள்ளவோ அல்லது எதிர்க்கவோ இல்லை, அரசாங்கத்தின் மௌனம், பல கூடுதல் குறித்த கேள்விகளை எழுப்புகிறது.

“நடந்தவற்றைப் பற்றி, ராணுவம் கருத்து கூறுகிறது. ஆனால் அரசாங்கமோ, எந்த அதிகாரப்பூர்வ விளக்கமும் தராமல் மௌனம் காக்கிறது,” என்று அவர் கூறினார்.

சிம்லா ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா நீண்டகாலமாக வைத்திருந்த இருதரப்பு விவகாரம் என்ற நிலைப்பாட்டை மீறி, மோடி அரசாங்கம் காஷ்மீர் பிரச்சினையை சர்வதேச மயமாக்கியுள்ளது தவறு என்று ராஜா குற்றம்சாட்டினார். இப்போது இந்த விவகாரம் சர்வதேச மன்றத்தில் விவாதத்திற்கு திறந்துள்ளது.

“காஷ்மீர் தாக்குதல் குறித்து விவாதிக்க ஒரு சிறப்பு அமர்வைக் கூட்டுவதற்குப் பதிலாக, நடந்தது என்ன என்பதை வெளிநாடுகளுக்கு விளக்க, பல கட்சி பிரதிநிதிகளை அனுப்புகிறது. ஆனால் இந்த விவரங்களை, அரசாங்கத்தின் மதிப்பீடு, அடுத்த கட்ட நடவடிக்கைகள் எதைப் பற்றியும் இந்திய நாடாளுமன்றத்துக்கும் மக்களுக்கும் பாஜக அரசு சொல்லவே இல்லை” என்று அவர் கூறினார்.

“இந்தியா நான்காவது பெரிய பொருளாதாரமாக மாறுவதாக மோடி நிர்வாகம் பெருமையாகக் கூறிக்கொண்டாலும், உலகளாவிய மனித மேம்பாட்டுக் குறியீடுகளில் நாடு தொடர்ந்து சரிந்து வருகிறது. ஆண்டுதோறும் இரண்டு கோடி வேலைவாய்ப்புகளை வழங்குதல், கருப்புப் பணத்தை மீட்டெடுத்தல் மற்றும் விவசாயிகளுக்கு நியாயமான குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதி செய்தல் போன்ற முக்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதற்காக பாஜகவை அவர் கடுமையாகச் சாடினார்.

“விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள், அதே நேரத்தில் கார்ப்பரேட் நிறுவனங்கள் பாதுகாக்கப்பட்டு ஆதரிக்கப்படுகின்றன,” என்று அவர் குற்றம் சாட்டினார்.

“ஒரே நாடு, ஒரே தேர்தல்” என்ற பாஜகவின் முயற்சிக்கு எதிராக ராஜா எச்சரித்தார். இது கூட்டாட்சி முறைமைக்கும், இந்தியாவின் பல கட்சி ஜனநாயகத்திற்கு நேரடி அச்சுறுத்தலாகும். இடதுசாரி ஜனநாயக முன்னணியின் ஆட்சியில், கேரள மாநிலம் நாட்டிற்குச் சரியான பாதையைக் காட்ட முடியும்.” என்று அவர் தெரிவித்தார்.

**தமிழில்: டி.எம்.மூர்த்தி**

## சட்டமன்றத் தேர்தல்களுக்கு முன்னர்...

லோக்தந்திரிக் ஜனதா கட்சியின் (எல்ஜேபி) தேசியத் தலைவர் ஜாவேத் ராசா தலைமையிலான குழுவினர், இன்று அஜாய் பவனில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, தேசியச் செயலாளர் கிரிஷ் சந்திர சர்மா ஆகியோருடன் சமகால அரசியல் சூழ்நிலை குறித்து விவாதித்தனர்.

எல்ஜேபி துணைத் தலைவர்கள் சுபைர் அகமது குரைஷி, நாடர்கவுடா, செயலாளர் சரிதா மற்றும் பல மாநிலங்களைச் சேர்ந்த தலைவர்கள் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர். பல மாநிலங்களில் நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தல்களுக்கு முன்னர் பாஜகவை எதிர்கொள்ள இடது, முற்போக்கு மற்றும் மதச்சார்பற்ற சக்திகளின் ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர்களிடம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை வலியுறுத்தியது.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 10

## மன்னிப்பு கேட்க வேண்டுமா கமலஹாசன்?

வடபுலத்தில் வல்லாண்மை செய்தாலும், தென் மாநிலங்களில் ஒதுக்கப்படுவது பாஜகவைப் பெரிதும் உறுத்துகிறது. மதத்தால் பிளவுபடுத்தும் வடமாநில உத்திகள் இங்கு பலிக்கவில்லை.

'உறவாடிக் கெடுப்பதே சிறந்த வழி' என்று மகாராஷ்டிரா, பீகார் வழிமுறையை, இப்போது இங்கு செயலாக்கத் தொடங்கிவிட்டது.

தெலுங்கானாவில் அதிகார உச்சத்தில் இருந்த டிஆர்எஸ் கட்சியின் தலைவர் கே.சந்திரசேகரராவின் மகள், கவிதாவை அமலாக்கத்துறை சாராய வழக்கில் கைது செய்தது. ஐந்து மாதம் சிறையில் இருந்தார்.

தான் சிறையில் இருந்த போது, அவரது சகோதரரும் கட்சியின் செயல் தலைவருமான கே.டி.ராமாராவும் வேறு சிலரும், கட்சியை பாஜகவுடன் இணைக்க முயன்றதாக கவிதா குற்றம் சாட்டி யிருக்கிறார்.

கேரளாவில் இடது ஜனநாயக முன்னணியும், ஐக்கிய ஜனநாயக முன்னணியும் மாறி மாறி ஆட்சியில் இருக்கின்றன. இங்கு கால் பதிப்பதற்காக, தனது வழக்கமான இந்துத்துவ மேலாதிக்கத் தோரணையை கைவிட்டு, கிறித்துவர் அடர்த்திமிக்க மாவட்டங்களில், கிறித்தவர்களைத் தனது மாவட்டச் செயலாளர்களாக பாஜக நியமித்துள்ளது.

காங்கிரசின் புகழ் பெற்ற தலைவர் மறைந்த ஏகே அந்தோணியின் மகன் பாஜகவில் சேர்க்கப்பட்டுள்ளார். கணிசமான பலம் கொண்ட ஈழவர் சமூகத்தின் கட்சியோடு கூட்டணி அமைக்கிறது.

ஆந்திராவில் ஆட்சி நடத்தியது ஒய்எஸ்ஆர் காங்கிரஸ். அங்கும் குடும்பத்தில் குழப்பம். ஜெகன்மோகன் ரெட்டியின் சகோதரி ஷர்மிளா காங்கிரசுக்குப் போனார்.

பாஜகவின் அனைத்து மசோதாக்களையும் நாடாளுமன்றத்தில் ஆதரித்து வாக்களித்தார். ஆந்திர மாநில நலன்களை விட்டுக் கொடுத்தார். பாஜகவுடன் ரகசியக் கூட்டணி வைத்திருந்தார் என்பதே அவர் சொன்ன குற்றச்சாட்டாகும்.

தமிழ்நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர், மூத்த தலைவர் ராமதாஸ் பகிரங்கமாக அளித்த பேட்டி, பாஜகவின் பல திரை மறைவு வேலைகளை வெளிப்படுத்தியது.

பாஜகவுடன் கூட்டணியை தான் விரும்பாத போதிலும், தன் மகனும் மருமகளும் தனது காலைப் பிடித்துக் கொண்டு அழுததாகவும், அந்தக் கூட்டணியை ஏற்கவில்லை என்றால் எனக்கு நீங்கள் கொள்ளி வைக்க வேண்டி வரும் என்ற அளவுக்கு உணர்வுபூர்வமாக அழுத்தம் கொடுத்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

அதிகாலையில் 'பாரத் மாதா கி ஜே' என்ற முழக்கம் கேட்டு வெளியில் பார்த்தால், கூட்டணி ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக பாஜக தலைவர்கள் தன் வீட்டுக்குள் வந்து கொண்டிருந்ததாகவும் அவர் கூறியிருக்கிறார்.

அரசியல் கட்சியைத் துவங்கிய கமலஹாசன், பலமொழிகளில் வெளியாகும் தனது படம் பற்றிய அறிமுக விழாவில். தமிழின் மகள் கன்னடம் என்று கூறிவிட்டார்.

திராவிட மொழிகள் அனைத்தும் சகோதர மொழிகள்தான். ஒருவேளை அச்சுமுறையும், பத்திரிகைகளும், திரைப்படமும் தோன்றி நம்மை இணைக்காமல் போயிருந்தால், இப்போது நெல்லையிலும், மதுரையிலும், கோவையிலும், சென்னையிலும் நாம் வேறு வேறு மொழிகளைப் பேசிக் கொண்டு இருந்திருக்கலாம்!

ஆனால் கமலஹாசன் பேசியதில் நாம் எல்லோரும் உறவுகள்தான் எனும் நல்லெண்ணம் தொனித்ததே தவிர, எந்த ஒரு மொழியையும் உயர்த்த வேண்டும் அல்லது தாழ்த்த வேண்டும் என்ற உள்நோக்கம் ஏதும் இல்லை.

ஆனால் இதை ஒரு ஆயுதமாக பாஜக பற்றிக் கொண்டது. கன்னட மொழியைத் தாழ்த்தி விட்டதாக ஆரவாரக் கூச்சல் எழுப்பியது.

காங்கிரஸ்காரரான கர்நாடகா முதல்வர் சித்தராமையாவைச் சிக்கலில் மாட்டியது. அவர் பேசாமல் இருந்தால், கன்னட மொழிக்கு எதிரானவர் என்று தூற்றலாம். கமலஹாசனைக் கண்டித்தால், தமிழ்நாட்டுக்கும் கர்நாடகாவுக்கும் இடையிலான உறவை மேலும் சீர்கெடுக்கலாம். ஏதொன்றும் பாஜகவுக்கு நல்லது.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டு முதல்வர் ஏன் வாய் திறக்கவில்லை என்று இங்கும் சங்கிகள் கூக்குரலிடுகின்றனர். எப்படியேனும் தகராறு முற்ற வேண்டும். அடையாள அரசியல் முற்றினால், இப்படித்தான் அது எதிரியின் கைகளில் ஆயுதமாகும்!

இந்தியாவின் பன்மைத்தன்மையை ஒழித்துக் காவி பூசுகிற, மாநில உரிமைகளைப் பறித்து அதிகாரங்களை எல்லாம் டெல்லிக்குக் கொண்டு சேர்க்கிற பாஜகவின் வல்லாதிக்கத்தை, எதிர்த்து நிற்கும் சக்திகளிடையே உட்பகையை உருவாக்கி பலவீனப்படுத்தும் பாஜகவின் தொடர் முயற்சியின் இன்னொரு பக்கமே இது!

இது பற்றிய வழக்கை விசாரித்த கர்நாடகா உயர்நீதிமன்றம், நீங்கள் என்ன மொழியியல், வரலாற்றியல் வல்லுநரா என வினவி, மன்னிப்புக் கேட்டால் தீர்ப்பளிப்பதாகச் சொன்னது விசித்திரமாக இருக்கிறது. தவறாகப் பேசியிருந்தால் மன்னிப்பு கேட்பதில் தயங்க வேண்டியதில்லை. ஆனால் தவறாகப் புரிந்து கொண்டோம் மன்னிப்பு கேள் என்பது கீழ்மைப்படுத்துவதாகும்.

மக்களை ஒன்றுபடுத்துகிற, அவர்களது விருப்பங்களுக்கும் தேவைகளுக்கும் முன்னுரிமை தருகிற முற்போக்கு சக்திகள் பாஜகவின் இந்த நரித்தந்திரங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

# கள்ளிப்பால் அல்ல கறந்தபால்

## இந்து தமிழ் கட்டுரைக்கு ஆவின் ஏஐடியுசி மறுப்பு



தமிழ்நாடு அனைத்து ஊழியர்கள் சங்கப் பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி, ஆவின் தொழிலாளர்கள் குறித்து தமிழ் இந்து இதழில் வெளியான கட்டுரைக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்

'ஆவின் தந்த கள்ளிப்பால்' எனும் தலைப்பில் பெருமதிப்புக்குரிய நீதியரசர் கே.சந்துரு அவர்கள் இந்து தமிழ் திசை (03.06.2025) நாளிதழில் ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார்.

தொழிலாளர்களுக்கு சட்டப்படி கிடைக்க வேண்டிய உரிமைகளை வழங்க மறுத்து, அவர்களை அலைக்கழித்து காலங்கடத்தி சோர்வடைய வைப்பதற்காக, வேலையளிப்பவர்கள் நீதிமன்றங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்ற அந்தக் கட்டுரையின் அடிப்படைக் கருத்தில் நமக்கு மாற்றுக் கருத்து இல்லை.

ஆனால் ஆவின் நிர்வாகம் ஒரு அடிமை சாசனத்தை தொழிலாளர்களிடம் எழுதி வாங்கி, ஒப்பந்த தொழிலாளர்களாக்கி வேலை வாங்கியதாகவும், அவர்களுக்கு புதிய தீர்ப்பின் அடிப்படையில் நீதி வழங்கப்படுமா என்ற கேள்வியை முன்வைத்தும் கட்டுரையில் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை அல்ல.

மக்களிடம் செல்வாக்குப்பெற்ற ஒரு நாளிதழில் பதிவாகி விட்டதால், உண்மைகளை விளக்கி பதில் அளிக்க வேண்டியது, ஏஐடியுசி தமிழ்நாடு பால்வள அனைத்து ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் என்ற வகையில் எனது கடமையாகிறது.

மதுரையில் நடைபெற்ற பால்வளத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக, ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் மேற்கொண்ட மாதவரம் பால் பண்ணையின் 1,100 தொழிலாளர்களை, சட்ட விதிகளுக்கு விரோதமாக, எம்ஜிஆர் அவர்களின் அஇஅதிமுக அரசு 1980ல் வேலைநீக்கம் செய்தது.

அவர்களுக்கு மறுபடி வேலை தர நீதிமன்றங்கள் உத்தரவிட்டும், மேல் முறையீடுகளை செய்து அரசு தொடர்ந்து தடுத்து வந்தது.

கலைஞர் முதலமைச்சராக 1996 இல் பதவி ஏற்ற பிறகு, அன்றைய சட்டப்பேரவை உறுப்பினரான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியியைச் சேர்ந்த ஏஐடியுசி தலைவர் திருப்பூர் கே.சுப்பராயன், பால்வள தொழிலாளர்களுக்கு மீண்டும் பணி வழங்க வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

1997ல், பால்வள மானியக் கோரிக்கையின் போது, கே.சுப்பராயன் இந்தப் பிரச்சனையை கடுமையாக வலியுறுத்திய நிலையில், பதிலளிக்க எழுந்த பால்வள அமைச்சர் திரு சுந்தரம் அவர்களை கையசைத்து அமர்த்தி விட்டு, கலைஞர் தானே பேசினார்

''பணித் தொடர்ச்சி இன்றி தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள அரசு உறுதியளிக்கிறது'' என்று வாக்களித்தார். ஆவின் நிர்வாக அதிகாரிகளின் ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை மீறி அவர் இவ்வாறு ஒரு அரசியல் முடிவு எடுத்தது முக்கியமானதாகும்.

பணி நீக்கப்பட்ட தொழிலாளர்கள் அனைவரும் ஏஐடியூசி சங்கத்தின் உறுப்பினர்கள். சங்கக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு அந்த தொழிலாளர்கள் தனித்தனியாக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு பணிக்கு சேர்வது என்று முடிவெடுக்கப்பட்டது. கலைஞரிடம் மேலும் வலியுறுத்தி அனைத்து உரிமைகளையும் பெற முடியும் என்ற நம்பிக்கையின் காரணமாக அந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பணித் தொடர்ச்சியின்றி வேலைக்குச் சேர்க்கப்பட்டிருந்தாலும், அன்றைய முதலமைச்சர் கலைஞரிடம் தொடர்ந்து முறையிட்டதால், பணிக்கு சேர்ந்த 7 மாதத்திலேயே, வேலை நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு அவர்கள் பணியாற்றிய வருடங்களோடு சேர்த்து, பணி தொடர்ச்சியோடு அவர்கள் நிரந்தரமாக்கப்பட்டனர்.

பால்வள ஊழியர்களுக்கு, அரசு பணியாளர்களுக்கு உரிய சம்பள விகிதம் பொருந்தும். அதன்படி முழுச் சம்பளத்தை அவர்கள் வேலைக்கு சேர்ந்த ஏழே மாதத்தில் பெறத் தொடங்கினார்கள்.

வேலை நீக்கம் செய்யப்பட்டபோது அவர்கள் பெற்று வந்த மாதச் சம்பளம் 1000 ரூபாயை விடக்குறைவு.

பணியில் சேர்ந்தவர்களில் மூத்த தொழிலாளர்கள், 2010 ஆம் ஆண்டு வாக்கில் 13 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றனர். அப்போது அவர்களது மாத சம்பளம் சுமார் 30,000 ரூபாய்.

அவர்களில் மிக இளைய தொழிலாளராக இருந்தவர்கள் 2019ல், 22 ஆண்டுகள் பணி முடித்து ஓய்வு பெற்றனர். அப்போது அவர்களது மாத சம்பளம் சுமார் 45 ஆயிரம் ரூபாய்.

நிரந்தரப் பணியாளருக்குரிய பணிக்கொடை, வருங்கால வைப்பு நிதி ஆகியவற்றை அவர்கள் பெற்றனர். பால்வளத் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி அடிப்படையில் அமைந்தது. அது மாதத்துக்கு ரூபாய் 1,000 என்ற அளவிலேயே இருந்தது.

கலைஞர் 2006ல் மீண்டும் முதல்வர் பொறுப்பேற்ற பிறகு, ஆவின் தொழிலாளர்களுக்காக தனி ஓய்வூதியத் திட்டம் வேண்டும் என வலியுறுத்தினோம். அன்றைய பால்வளத்துறை அமைச்சர் திரு உ. மதிவாணன் அவர்கள் முன்னிலையில் இதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக வருங்கால வைப்பு நிதி வழங்கும் ஓய்வூதியத்துடன், கூடுதலாக மாதம் ரூபாய் 3,000 வீதம் வழங்கி ஆவின் தனி ஓய்வூதியத் திட்டம் உருவாக்கப்பட்டது. பிறகு அந்தத் தொகை மாதம் ரூபாய் 4,500 என்று உயர்த்தப்பட்டுள்ளது.

இத்தனை உரிமைகளையும், அடிமை சாசனத்தில் கையெழுத்திட்டதாக சொல்லப்படும் அந்தத் தொழிலாளர்கள் பெற்று வருகின்றனர் என்ற செய்தி மாண்புமிகு நீதியரசர் அவர்களுக்கு சொல்லப்படாமல் இருந்திருக்கலாம்.

அன்று பணிக்குச் சேர்ந்ததால், வேலையையும் கௌரவமான மாத ஊதியத்தை உறுதி செய்ததோடு, அதன் வழியாக அவர்களுடைய சந்ததியினரையும் படிக்க வைத்து நல்ல நிலைக்குக் கொண்டுவர அவர்களால் முடிந்திருக்கிறது.

இந்த நலன்களைப் பெற்று விட முடியும் என்ற உறுதியோடு அவர்கள் தொழிற்சங்கத்தில் ஒற்றுமையாக இருந்ததும், தொடர்ந்து எடுக்கப்பட்ட போராட்டங்கள் மற்றும் உரிய முறையீடுகளும் இதற்குக் காரணமாகும். 'சாபத்தையும் வரமாக்கிக் கொள்ள' தொழிலாளர்களின் ஒற்றுமையால் இயலும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

ஒப்பந்தத்தை அடிமை சாசனமாக கருதி, கையெழுத்திட மறுத்த இரண்டு தொழிலாளர்களுக்கு 45 ஆண்டுகளுக்குப் பின்பு ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. கிட்டத்தட்ட அவர்களுடைய வாழ்க்கையின் கடைசி பகுதிக்கு வந்து விட்ட பின்பு அவர்களுக்கு வழங்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடுகிறது.

வழக்குகளை மட்டுமே நம்பியிராமல், தீர்வுக்கான வாய்ப்பு கிடைத்தால், அதனைப் பற்றிக் கொண்டு, மேலும் மேம்பாட்டுக்குத் தொடர்ந்து முயல வேண்டும் என்பது ஒரு தொழிற்சங்க உத்தியாகும்.

ஆவின் நிர்வாகம் கள்ளிப்பால் தர முயன்றாலும், அதனைக் கறந்த பால் ஆக்கிகொள்ள, முதல்வர் கலைஞரின் ஒத்துழைப்போடு தொழிலாளர்களால் முடிந்தது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.



த.லெனின்

# ஆயுஷ்மான் பாரத் அமித்ஷா அளந்து விடும் பொய்கள்


**அளவில்லாப் பொய்கள், தெளிவில்லா முழக்கங்கள் என்று நாள்தோறும் செயல்பட்டு வருகிறது ஒன்றிய பாஜக அரசு!**

உலகிலேயே மிகவும் வணிகமயமாக்கப்பட்ட மருத்துவத் துறையைக் கொண்ட இந்தியாவில் கடந்த 11 ஆண்டுகளில் இல்லாத வளர்ச்சி என்று போகிற போக்கில் பொல்லாத பொய்யை அவிழ்த்து விட்டு உள்ளார் அமித்ஷா.

மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் உள்ள தேசியப் புற்றுநோய் நிறுவனத்தில் ஸ்வஸ்தி நிவாஸ் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அமித்ஷா, பிரதமர் மோடி தலைமையிலான ஆட்சியில், இந்தியாவின் சுகாதார உள்கட்டமைப்பு மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டுள்ளதாகவும்,

60 கோடி ஏழை மக்களுக்கு, தலா 5 லட்சம் வரை இலவச சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஒன்றிய அரசின் இந்த முயற்சிகளுக்கு உதவிய தனியார் நிறுவனங்களுக்குப் பாராட்டுகளையும் தெரிவித்துத் தனது பசப்புரையை நிகழ்த்தியுள்ளார்.




## உண்மை என்ன?

ஆயுஷ்மான் பாரத் மூலம் பெரும் மக்கள் தொகையினருக்குச் சுகாதாரப் பாதுகாப்பு என்ற வாக்குறுதி, தனியார் மூலதனத்தைப் பெரிதும் நம்பியிருக்கும் ஒரு சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் இந்தியாவின் சுகாதார அமைப்பில் எந்தவகை தாக்கங்களை ஏற்படுத்தும்? அது எப்படி மக்களுக்கு உதவ முடியும்?

கோவிட்19 தொற்றுநோய் காலம் அரசின் ஏராளமான கட்டமைப்பு தோல்விகளை ஏற்கெனவே அம்பலப்படுத்தியுள்ளது. அவற்றில் மிக முக்கியமானது இந்தச் சுகாதார அமைப்பும் அடங்கும். 2018 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா (AB PM-JAY), பாரதிய ஜனதா கட்சியின் முதன்மையான சுகாதாரக் காப்பீட்டுத் திட்டமாகப் பரப்புரை செய்யப்படுகிறது. இது 10 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கு ரூ.5 லட்சம் வரை சுகாதாரக் காப்பீடு வழங்கும் எவரையும் விட்டுவிடாதீர்கள்'' என்றும் வேறு கூறுகிறது. 60 கோடி மக்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பது விளங்கவில்லை. வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் அனைவரும் என்று சொன்னால் அதற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. அத்தோடு ஆண்டுதோறும் மருத்துவச் சுய செலவுகளால் வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ள சுமார் 7 கோடி பேர் வறுமைக் கோட்டுக் கீழே வருகின்றனர் என்று நிதி ஆயோக் கூறுகிறது. ஆனால் இந்தச் சேவை வழங்கலுக்காகத் தனியார் சுகாதார வழங்குநர்களை நம்புவதன் மூலமே இதனைச் செய்ய முடியும். பொதுச் சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்தாமல் அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல் தனியார் மருத்துவமனைகளை மட்டுமே நம்பி இருப்பது இந்தியா போன்ற அதிகம் மக்கள் தொகை கொண்ட நாடுகளுக்கு ஏற்றதல்ல. எனவே, இந்தச் சுகாதாரக் காப்பீடு மக்களுக்குப் பயனுள்ளதாக இல்லை.

தேசியச் சுகாதார ஆணையத்தின் சமீபத்திய அறிக்கை, ஊரடங்கு காலத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் சராசரி வாராந்திரக் கோரிக்கைகள் 51% குறைந்துள்ளதாகக் கூறப்பட்டது. மேலும் கவலையளிக்கும் விதமாக, புற்றுநோய் பராமரிப்பு மற்றும் பிரசவங்களுக்கான கோரிக்கைகள் முறையே 64% மற்றும் 26% ஆக வீழ்ச்சியடைந்து உள்ளன.

## உள்கட்டமைப்பு இல்லாத தனியார் சுகாதார அமைப்புகள்

காப்பீட்டு வலையமைப்பில் உள்ள மருத்துவமனைகளின் பதிவேட்டில் (ROHINI) இருந்து பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்த மிதா சவுத்ரி மற்றும் பிரிதம் தத்தா, ஆயுஷ்மான் பாரத் திட்டத்திற்கு 3% தனியார் மருத்துவமனைகள் மட்டுமே தகுதியுடையவை என்பதைக் கண்டறிந்தனர். அவர்களின் மதிப்பீட்டின்படி, சராசரியாக, ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 1.28 பட்டியலிடப்பட்ட மருத்துவமனைகள் மட்டுமே இந்தத் திட்டத்தின் கீழ் நோயாளிகளுக்குச் சுகாதாரப் பராமரிப்பை வழங்க இயலும் என்றும், பட்டியலிடப்பட்ட மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லை என்றும் கூறுகின்றனர்.

காப்பீட்டு நிறுவனங்களால் பட்டியலிடப்பட்ட மருத்துவமனைகளில் பெரும்பாலானவை 50க்கும் குறைவான படுக்கைகளைக் கொண்டிருந்தன. இவற்றில், மூன்றில் இரண்டு பங்கு 30க்கும் குறைவான படுக்கைகளைக் கொண்டிருந்தன. அகில இந்திய அளவில், தரவுத் தொகுப்பில் உள்ள சுமார் 65% மருத்துவமனைகள் 1150 படுக்கைகளும், 13% 50100 படுக்கைகளும், மீதமுள்ள 8% 100 படுக்கைகளுக்கு மேல் படுக்கைகளைக் கொண்டிருந்தன என்று பல முதன்மை ஆய்வுகளின் கண்டுபிடிப்புகளுடன் ஒத்துப்போகிறது, அவை நாட்டில் உள்ள பெரும்பாலான தனியார் மருத்துவமனைகள் 50க்கும் குறைவான படுக்கைகளைக் கொண்ட சிறிய நிறுவனங்கள் என்பதை சுட்டிக்காட்டியுள்ளன. அரசு சுகாதார நிறுவனங்களை, மருத்துவமனைகளை வளர்த்து, விரிவாக்காமல் தனியாரை மட்டும் ஊக்குவித்து லாபம் கொழிக்க வைக்கும் திட்டமாகத்தான் இது அமைந்துள்ளது என்பது மிகப் பெரும் தோல்வியாகும்.

தொற்று நோய்க் காலங்களில் தனியார் நிறுவனங்கள் தங்களது சேவைகளை நிறுத்திவிட்டுச் சென்றனர். அரசு நிறுவனங்கள்தான் பெரும் பணியினைச் செய்து முடித்தனர் என்பது நமது அனுபவமாகும். நிலைமை இப்படி இருக்க எப்படி அனைவருக்கும் சுகாதாரம் கிடைக்கும்?

## ஊழல் மயமான ஆயுஷ்மான் பாரத்!

இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட முதல் ஆண்டில், பயனாளிகள் தொடர்பாக 1,200 ஊழல் வழக்குகள் பதிவாகியுள்ளன. தலைமைக் கணக்காயர் (CAG) ஆய்வு இதில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து நிறைய குறிப்பிட்டுள்ளது.

முறைகேடுகள் நடைபெற்ற 376 மருத்துவமனைகளில் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. மேலும் ஆறு மருத்துவமனைகள் மீது முதல் தகவல் அறிக்கைகள் (FIR) பதிவு செய்யப்பட்டுள்ளன. விசாரணைகள் முடிந்த பிறகு, ரூ.1.5 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 97 மருத்துவமனைகள் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

தனியார் துறையில், அனுமதிக்கப்பட்ட மருத்துவமனைகளில் 75 சதம் 25 படுக்கைகளுக்கும் குறைவானவை என்று இதன் வலைத்தளத்தில் கிடைக்கும் “பி.எம் ஜெய் ஐ ஒரு வருடத்தில் செயல்படுத்துவதில் கற்றுக்கொண்ட பாடங்கள்” என்ற ஆவணம் கூறுகிறது. சிறந்த செயல்படுத்தலுக்குச் சவாலாக இதில் நடைபெறும் மோசடியைப் பட்டியலிடுகிறது தேசியச் சுகாதார ஆணையம். எனவே, தனியார் சுகாதார வழங்குநர்கள் “லாப நோக்கத்துடன்” செயல்படுகின்றனர் என்பது கடந்த காலத்தில் நிரூபணமாகி உள்ளது.

## மூத்த குடி மக்களுக்கான மருத்துவக் காப்பீடு

மூத்த குடிமக்களுக்கான ஆயுஷ்மான் பாரத் பி.எம்ஜெய்: வரையறுக்கப்பட்ட காப்பீட்டுத் தொகை, காப்பீடு, மருத்துவமனை வலையமைப்பு முழுக் குடும்பத்திற்கும் ரூ.5 லட்சம் காப்பீடு போதுமானதாக இருக்காது என்பது நடைமுறையில் தெளிவாகிறது. இதற்கான வயது 70 வயது என்று குறிக்கப்படுகிறது. தாண்டியவர்கள் என்றால் இந்த ஐந்து லட்சம் ரூபாய் இருவருக்கும் இடையே பங்கிட்டுக் கொள்ளப்படும் என்பது எவ்வளவு அநீதியானது. ஆனால் அரசின் அறிவிப்புகளின் படி 60 வயதைத் தாண்டியவர்கள் மூத்த குடிமக்களாவர். அப்படி எடுத்துக் கொண்டால் ஒட்டுமொத்த இந்தியாவில் முத்தம் 14.9 கோடி பேர் இதன் கீழ் வருவர். 70 வயது என்ற அளவுகோல் வைக்கப்பட்டதால் 8.9 கோடி பேர் இதில் விடுபட்டுள்ளனர். இதையும் இணைத்தால் இத்திட்டத்திற்கான கூடுதல் நிதி 150% ஒதுக்கப்பட வேண்டும். அதாவது 5100 கோடி ரூபாய் கூடுதலாக வரும். இதனை தடுக்கவே எழுபது வயது என்ற வரம்பு உருவாக்கப்பட்டு இருக்கிறது. இதிலும் எவ்வளவு ஏமாற்று வேலை!

## நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய, மாநிலப் பங்கீடுகள்!

இந்த நிதியும் கூட ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பங்கு 60:40 ஆக உள்ளது. ஆனால் பேர் என்னவோ பெத்த பேராக, பிரதமர் பேரில் இருக்கிறது. வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் இரண்டு இமயமலை மாநிலங்கள் இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தரகண்ட் மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆகியவற்றிற்கு 90:10 ஆகவும், சட்டமன்றம் இல்லாத யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய அரசின் பங்கு 100% ஆகும். அதேசமயம் சட்டமன்றம் உள்ளவர்களுக்கு பங்களிப்பு ஏற்கனவே மாநிலங்களுக்கு உள்ள 60:40 ஆகும்.

ஆயுஷ்மான் பாரத் பெரும்பாலும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள், சீரமைப்பு அறுவை சிகிச்சைகள் மற்றும் சில வகையான புற்றுநோய் சிகிச்சைகள் போன்ற சிகிச்சைகளுக்குக் காப்பீட்டை விலக்கி விடுகிறது என்பதை நினைவில் கொண்டால் இது போதுமானது அல்ல என்பது தெளிவாகும். எனவே மருத்துவத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யவும், ஒரு வலுவான பொதுச் சுகாதார கட்டமைப்பை உருவாக்குவதும்தான் பிரச்சனைகளுக்குத் தீர்வே தவிர வீண்பெருமை பேசிப் பீற்றிக்கொள்வதால் எந்தப் பயனுமில்லை. ஒன்றிய அரசுக்குப் பித்தம் தெளிந்தால் போதும்!

தொடர்புக்கு: 9444481703

### ஒரே செல்போன் எண்ணில் 7.5 லட்சம் பேர் பதிவு

உலகில் சராசரியாக 7.23 சதவிகிதம் பேர் மருத்துவக் காப்பீடு பெற்றுள்ளனர் என்று கூறப்படுகிறது. ஆனால் இந்திய அரசின் சமீபத்திய பொருளாதார ஆய்வறிக்கையின் தரவுகளின்படி உலக சராசரியை விடவும் மிகக் குறைவாக 3.76 சதவிகிதம் பேர் மட்டுமே ஏதாவது ஒரு காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

மொத்தம் 24.33 கோடி ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீடு அட்டைகள் உருவாக்கப்பட்டிருக்கும் சூழலில், இந்தக் காப்பீடு திட்டத்தில், 7.5 லட்சம் பயனாளிகளின் பதிவு, ஒரே செல்போன் எண்ணுடன் இணைக்கப்பட்டு, மோசடி நடைபெற்றுள்ளதாக சி.ஏ.ஜி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஏழு ஆதாருடன் 4,761 பதிவுகள் இணைக்கப்பட்டுள்ளன.

## இந்தியக் கல்வித்துறையில் சாதியப் பாகுபாட்டின் புதிய முகம்

# “தகுதியானவர் இல்லை”



டாக்டர் வினய் குமார் சிங்

**இந்தியக் கல்வித்துறையில், ஆசிரியர், பேராசிரியர் ஆகிய பணிகளில், இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணி நியமனம் செய்ய வேண்டும். சட்டப்படி அவ்வாறு நியமிக்க முடியாது என்று சொல்ல முடியாது.**

ஆனாலும் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களில் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சார்ந்த ஆசிரியர் பேராசிரியர்களை, நியமிப்பதில்லை.

“நியமிக்க முடியாது” என்று சொல்வதற்குப் பதிலாக, ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களில் நியமிப்பதற்கு, “தகுதியானவர்கள் கண்டறியப்படவில்லை” (Not Found Suitable) என்று கூறுகிறார்கள். இது அரசியல் சாசனத்திற்கு, சமூக நீதிக்குத் துரோகம் இழைப்பதாகும். “சத்தமே இல்லாமல் இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ‘தகுதியானவர் இல்லை’ என்ற சொல், இந்தியக் கல்வித்துறையில் நிறுவனமயமாக்கப்பட்ட சாதி சார்புக்கான ஒரு மறைமுகமான சொல்லாக வெளிப்பட்டுள்ளது.

பட்டியல் சாதிகள் (SC), பட்டியல் பழங்குடியினர் (ST) மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் (OBC) ஆகியவற்றிலிருந்து தகுதியான போட்டியாளர்கள் இருந்தும் கூட, ஆசிரியர் பதவிகளுக்கு “தகுதியானவர் இல்லை” என்று முத்திரை குத்துவது, நடைமுறை பாகுபாடு மட்டுமல்ல இது மனுவாதத்தின் நவீன வெளிப்பாடாகும்.

### தடுப்பதற்கான ஒரு புதிய ஆயுதம்

ஒதுக்கப்பட்ட பேராசிரியர் பதவிகளில் 60% க்கும் மேற்பட்டவை காலியாகவே உள்ளன. மேலும் மத்திய பல்கலைக்கழகங்களில் ஒட்டுமொத்த ஆசிரியர்பதவிகளில் 30%க்கும்மேற்பட்டவை நிரப்பப்படவில்லை. இவர்களை நியமிக்கும் அதிகாரத்தில் உள்ள உயர்த்தப்பட்ட சாதிக்காரர்களுக்கு, பழங்குடி, பட்டியலின, பிற்படுத்தப்பட்டவர்களை, ஆசிரியர்களாகப் பார்க்க விருப்பமில்லை.

தேடிக் கண்டறிந்து. பணியிடங்களை நிரப்ப வேண்டிய பொறுப்பில் உள்ள பல்கலைக்கழக தேர்வு குழுக்கள்,

ஓரங்கட்டப்பட்ட சமூகங்கள் எதிர்கொள்ளும் தடைகளை அகற்றுவதற்குப் பதிலாக, ‘தகுதியானவரல்ல’ என்ற லேபிளைப் பயன்படுத்தி நிராகரிக்கத் தொடங்கியுள்ளன.

இது உயர்கல்வி நிறுவனங்களான ஐஐடிகள், ஐஐஎம்கள், மத்திய பல்கலைக்கழகங்கள் போன்றவற்றிலும் பரவியுள்ளது.

தகுதி வாய்ந்த போட்டியாளர்கள், அனைத்துத் தகுதி அளவுகோல்களையும் பூர்த்தி செய்து நேர்காணல்களில் தேர்ச்சி பெற்ற பின்னரும், ‘தகுதி’ச் சாயம் பூசி, சகிக்கவியலாது நாறிப்போன சாதிய மேலாதிக்கம் உந்தித் தள்ள, வாயிற் கதவை மூடுகிறார்கள்.

### காட்டிக்கொடுக்கப்படும் அரசியல் சாசனம்

இந்திய அரசியல் சாசனத்தின் 15(4), 16(4), மற்றும் 46 பிரிவுகள், சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு உறுதியான நடவடிக்கை மற்றும் பாதுகாப்புகளை கட்டாயப்படுத்துகிறது.

இடஒதுக்கீடு என்பது ஒரு ‘தர்ம காரியம்’ அல்ல; இது பல நூற்றாண்டுகளாக நிகழ்த்தப்பட்ட வரலாற்று அநீதியைத் திருத்துகிற வழிமுறையாகும். ஆனால் எந்த வெளிப்படைத்தன்மையும் இல்லாமல், தனது செயலுக்கு பொறுப்பு ஏற்காமல், வெறுமனே “தகுதியானவர் அல்ல” என்று அறிவிப்பதன் மூலம், இந்த அமைப்பு அரசியலமைப்பு பிரகடனப்படுத்திய சமத்துவத்தின் உணர்வைக் கேலி செய்கிறது.

எதிர்க்கட்சித் தலைவரான ராகுல் காந்தி அண்மையில் தில்லி பல்கலைக்கழக மாணவர்களோடு உரையாடிய போது, “காந்தி, டாக்டர் பி.ஆர். அம்பேத்கரை மேற்கோள் காட்டி, கல்வி என்பது சமூக அதிகாரமளிப்புக்கான மிகப்பெரிய ஆயுதம்” என்று சரியாகச் சுட்டிக்காட்டினார்.

கல்வியே கண்ணுக்குத் தெரியாத தடைகளால் பாதுகாக்கப்பட்ட கோட்டையாக மாறும்போது, சமத்துவத்தை எப்படி அடைய முடியும்?

### தகுதி எதிர் மனுவாதம்

பல நூற்றாண்டுகளாக கல்வி மறுக்கப்பட்டு, அண்மைக்காலத்தில் தான் படித்து, சமூக பொருளாதார தடைகளை எல்லாம் தாண்டி மேல் எழும்பி வருபவர்களை, அவர்களுக்கு உரிய உயரங்களை எட்ட விடாமல் தடுத்து நிறுத்துவதற்கு, ஆதிக்க சாதியினர் பயன்படுத்தும் உத்திதான் ‘தகுதி’

தலித், ஆதிவாசி மற்றும் ஓ.பி.சி மாணவர்கள், சிறந்த பள்ளிப்படிப்பு, பயிற்சி, ஆங்கிலக் கல்வி மற்றும் வழிகாட்டுதல் உள்ளிட்ட, இட ஒதுக்கீடு உரிமையை அடைய முடியாமல் தடுப்பதற்கும், தமக்கான உரிமையை எடுக்க முயற்சிப்போரை அவமதித்து கேலி செய்வதற்கும் “தகுதி” என்ற கட்டுக்கதை முன் வைக்கப்படுகிறது என்பதை நாம் உணர வேண்டும்.

உண்மையான நிகழ்ச்சி நிரல்: பிரமிட்டைப் பாதுகாத்தல்

இது வெறுமனே ஒரு நிர்வாகப் பிரச்சினை அல்ல. இது ஒரு அரசியல், சித்தாந்தத் திட்டம். ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகங்களை சேர்ந்த இளைஞர்கள், உரிய கல்வி கற்று, ஆசிரியர்களாக கல்வித்துறையில் நுழைவதை தடுப்பதன் மூலம், உயர் கல்வி நிறுவனங்களில் ‘உயர்த்தப்பட்ட சாதியின’ரின் ஆளுமையும், மதிப்புகளும், செயல்பாடும் எந்தக் கேள்விக்கும் உட்படாமல் தொடர்வதை உறுதி செய்கிறார்கள்.

உயர்த்தப்பட்ட சாதிகளைத் தவிர மற்ற சமூகங்களை சார்ந்த அறிஞர்கள் கல்வி போதிக்கிற பாடத்திட்டங்களை வகுக்கிற பொறுப்புகளில் இருந்து விலக்கப்பட்டால் மட்டுமே, வரலாறு, கலாச்சாரம் மற்றும் சமூக அறிவியலை திருத்தி தமக்கேற்ப எழுதிக் கொள்ளும் ஆர்.எஸ்.எஸ்ஸின் சித்தாந்தத் திட்டம் வெற்றிபெற முடியும்.

அதனால்தான் ‘தகுதியானவர் அல்ல’ என்பது வெறும் நிராகரிப்பு மட்டுமல்ல. இது இந்தியப் பல்கலைக்கழகங்களில் வெகு மக்களின் இருப்பையும், அவர்களது குரல்களையும் அழிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகும்.

### என்ன செய்ய வேண்டும்?

**1. வெறும் நிராகரிப்பு கூடாது:**

எந்த விளக்கமும் இன்றி ‘தகுதியானவர் அல்ல’ என்று நிராகரிக்கப்படும் நடைமுறைக்கு முடிவு கட்ட வேண்டும். ஒருவரை தகுதியானவர் அல்ல என்று முடிவு செய்தால், அந்த நிராகரிப்புக்கான விரிவான எழுத்து மூலமாக விளக்கங்களை தரவேண்டும் என்பதோடு, அவை சரியானதா? என்ற மறுமதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

**2. தேர்வுக் குழுக்களில் இடஒதுக்கீடு:**

தேர்வு குழுக்கள் ஒரு சார்பாக நிலை எடுப்பதைத் தடுக்க, அனைத்து பணியமர்த்தல் அமைப்புகளிலும் SC/ST/OBC பிரதிநிதித்துவத்தைச் சேர்க்க வேண்டும்.

**3. நிறுவன வழிமுறைகளை வலுப்படுத்துதல்:**

சம வாய்ப்பு குழுவை (Equal Opportunity Cells) புதுப்பித்து, SC/ST ஆணையங்கள் மேற்பார்வையிடப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

**4. விளிம்பு நிலை குரல்களுக்கு அதிகாரமளித்தல்:**

ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகங்களில் இருந்து உயர் கல்வி கற்ற கல்வியாளர்களுக்கு, கல்வி நிறுவன நிர்வாகத்தில் பங்கு, ஆய்வுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் உதவித்தொகை, கற்பதற்கான சுதந்திரம் ஆகியவற்றை வழங்கி ஆதரித்து ஊக்குவிக்க வேண்டும்

நிறைவாக

“தகுதியானவர் அல்ல” என்பது வெறும் சொற்றொடர் அல்ல. இது கல்வித்துறையில், தமக்குரிய பொருத்தமான இடங்களை பெறத் துணிமவர்களுக்கு எதிராக, சமத்துவமற்ற அமைப்பு வழங்குகிற தீர்ப்பு.

இது மனுவாதத்தின் ஒரு புதிய அவதாரம். பல நூற்றாண்டுகளாக நிகழ்த்தப்படும் ஒடுக்குமுறையை, அதிகாரப்பூர்வ ஆணையாக மாற்றியமைக்கும் தந்திரம்.

இந்தத் தடுப்பரன்களை மக்கள் பார்வைக்கு கொண்டு வரவும்,

அதன் ஒவ்வொரு செங்கல்லையும் தனித்தனியாகப் பிரித்து அகற்றவும், நமது பல்கலைக்கழகங்களை சமூக நீதி, பன்முகத்தன்மை மற்றும் ஜனநாயக சிந்தனையின் தொட்டில்களாக மீட்டெடுக்கவும் இதுவே சரியான நேரம்.

கல்வி சமத்துவத்திற்கான போராட்டம், மனித உரிமைகள். கண்ணியமான வாழ்க்கை ஆகியவற்றுக்கான பெரிய போராட்டத்திலிருந்து வேறுபட்டதல்ல. உண்மையில் அதுதான், அதன் அடித்தளமாகும்.

கட்டுரையாளர் உத்தரப் பிரதேச ஏஐடியுசியின் மாநிலத் தலைவர், மற்றும் கனரா வங்கி ஊழியர் சங்கத்தின் முன்னாள் தலைவர்.

தமிழில் டி.எம்.மூர்த்தி




## செங்கொடி ஆட்டோ சங்க துணைத் தலைவர் ஜி.கண்ணதாசன் குடும்பப் பாதுகாப்பு நிதி அளிப்பு



தென்சென்னை செங்கொடி ஆட்டோ சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சோழிங்கநல்லூர் தொகுதிச் செயலாளருமான ஜி.கண்ணதாசன் விபத்தில் காலமானார். அவரின் குடும்பப் பாதுகாப்பு நிதி அளிக்க முடிவு செய்யப்பட்டது.

அவரது படத்திறப்பு இரங்கல் கூட்டத்திற்கு, சங்கத்தின் மூத்த தோழர், தென்சென்னை எஸ்.ஏழுமலை தலைமை தாங்கினார்.

இதில் தமிழ்நாடு ஏஐடியூசி மாநிலத் தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், மாநிலச் பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன், ஏஐடியூசி மாநிலச் செயலாளர் ஆ.பாஸ்கர், ஆட்டோ சம்மேளனச் செயலாளர் பி.மாரியப்பன், மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் மு.சம்பத் ஆகியோர் புகழஞ்சலி உரை ஆற்றினர்.

தென்சென்னை தோழர்கள் முயற்சியால் சேகரித்த 1,50,000 ரூபாயினை ஏஐடியூசி தென்சென்னை மாவட்டத் தலைவர் ஆ.பாஸ்கர், கண்ணதாசன் குடும்பத்தாரிடம் வழங்கினார். செங்கல்பட்டு ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் ஜெகதீசன் தங்கள் மாவட்டப் பங்காக 5,000 ரூபாய் வழங்கினார்.

# ஜூலை 9 பொது வேலை நிறுத்தக் கோரிக்கைகளை மக்களிடம் எடுத்துச் செல்வோம்

## ஜெய்ப்பூர் ஏஐடியுசி பொதுக்குழு அறைகூவல்

**இராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில், இந்திரா காந்தி பஞ்சாயத்து ராஜ் வளாக அரங்கத்தில், ஏஐடியுசி தேசியப் பொதுக்குழு கூட்டம் மே 29, 30, 31 தேதிகளில், தலைவர் இராமேந்திர குமார் தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் அமர்ஜித்கௌர் அரசியல் மற்றும் செயல்பாட்டு அறிக்கைகளை முன்வைத்தார்.**






தமிழ்நாட்டில் இருந்து ஏஐடியூசி தேசியத் துணைத் தலைவர் சி.எச்.வெங்கடாசலம், செயலாளர்கள் வகிதா நிஜாம், ஸ்ரீ குமார், தமிழ்நாடு ஏஐடியுசியின் தலைவர் எஸ்.காசி விசுவநாதன், பொதுச்செயலாளர் எம்.இராதாகிருஷ்ணன், பொருளாளர் பீட்டர் துரைராஜ், துணைத் தலைவர்கள் என்.செல்வராஜ், மீனாள் சேதுராமன், எஸ்.ஆர்.தேவதாஸ், சி.தங்கவேலு, எம்.ஜகாங்கீர், செயலாளர்கள் ஆ.பாஸ்கர், எஸ்.சின்னசாமி, என்.சேகர் மற்றும் டாக்டர் சாந்தி, எம்.நந்தாசிங், எம்.முனுசாமி ஆகியோர் பங்கேற்றனர். ராஜஸ்தான் மாநிலத் தலைவர் எம்.எல்.யாதவ் கொடியேற்ற, தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திக் கூட்டம் துவங்கியது.

### பாலனுக்கு அஞ்சலி

மே 31 அன்று காலை தமிழ்நாடு தோழர்கள் ஏற்பாடு செய்த பாலன் நினைவஞ்சலி நிகழ்வில், அமர்ஜித் கவுர் மலரஞ்சலி செலுத்திப் பேசினார். தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி தோழர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர். ராஜஸ்தான் மாநிலப் பொதுச்செயலாளர் குணால் ராவத் வரவேற்புரையாற்றினார்.

ஜூலை 9 அன்று அனைத்துத் தொழிற்சங்கங்களும் பொது வேலைநிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்துள்ளன. மே 20 ல் நடைபெற இருந்த பொது வேலை நிறுத்தம், எல்லைப்புற மாநிலங்களில், நிலவிவரும் போர்ப் பதற்றத்தின் காரணமாக ஜூலை 9 அன்று மாற்றி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியையும் வேலைநிறுத்தக் கோரிக்கைகளையும் அனைத்துப் பகுதி மக்களுக்கும் எடுத்துச் செல்லுங்கள் என ஏஐடியுசியின் பொதுச்செயலாளர் அமர்ஜித் கவுர் அறைகூவல் விடுத்தார். ஏஐடியுசியின் அடுத்த மாநாட்டை பெங்களூருவில் நடத்த அம்மாநில ஏஐடியுசி ஒப்புக் கொண்டுள்ளது.

விசாகப்பட்டினம் ஆலை மூடுவதை எதிர்த்து நீண்ட நாட்களாகப் போராட்டம் நடந்து வருகிறது. அதில் ஈடுபடும் முன்னணி ஊழியர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இரும்பு எஃகுத் தொழிற்சாலைகளில் உள்ள சங்கங்கள் பல்வேறு போராட்டங்களை அறிவித்துள்ளன. போராடி வரும் இந்தத்துறை தொழிலாளர்களுக்கு ஆதரவைத் தரும் வகையில் ஜூன் 12 அன்று 'இரும்பு ஆலைத் தொழிலாளர்களுக்கு ஆதரவு நாள்' கடைபிடிப்பது என ஏஐடியுசி தீர்மானித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு இப்போது முக்கியப் பிரச்சினையாக வந்துள்ளது. இதனால் வேலையிழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இதிலுள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்கு மாநிலம்தோறும் துறை வல்லுநர்கள், கல்வியாளர்கள், அறிவியலாளர்கள், தொழிற்சங்கவாதிகளை அழைத்து மாநிலம்தோறும் கருத்தரங்கு நடத்துவது.

ஜம்மு காஷ்மீர், பூன்ச் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத் தாக்குதலில் இறந்து போன 14 பேருக்கு ரூ.25 இலட்சம் இழப்பீடு தர வேண்டும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும்.

தொழிற்சங்கக் கல்வியைப் பலப்படுத்தும் வகையில், மாநிலத்தில் அதற்கெனப் பொறுப்பாளர்களை இனங்காண வேண்டும்; உரிய பாடத்திட்டம் உருவாக்க வேண்டும்.

திட்டப்பணியாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும்.

அறிவியல் அடிப்படையிலான குறைந்தபட்ச ஊதியத்தை (தற்போது மாதம் ரூ.26,000) வலியுறுத்தி இயக்கங்களைத் தீவரப்படுத்துவது.

நூற்றாண்டு கடந்த சீனத் தொழிற்சங்கத்திற்கு, ஏஐடியுசி வாழத்துகளைத் தெரிவிக்கிறது.

இஸ்ரேல் இனவெறியை எதிர்த்துப் போராடி வரும் பாலஸ்தீன மக்களுக்கு தமது ஆதரவைத் தெரிவிப்பது. காசா கடற்கரை மீதான தாக்குதல் நிபந்தனையின்றி உடனடியாக நிறுத்த வேண்டும். பொதுத்துறைகளைப் பாதுகாத்து, வேலையின்மையை எதிர்த்து, விலைவாசி உயர்வை எதிர்த்து பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**ம.இராதாகிருஷ்ணன்**

### மோடி அரசாங்கத்தின் தோல்வி

பொதுக்குழுவின் முதல் அமர்வில் மே 29 அன்று, அமர்ஜித் கவுர், மோடி அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மிகவும் காத்திரமாக விமர்சித்தார். உள்நாட்டின் சகலதுறைகளிலும் மோடி அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது.

பொதுமக்கள் மத்தியில் போலி தேச பக்தியை உசுப்பி போர் வெறியைக் கிளப்பி, அப்பாவி பொதுமக்களைத் தாக்கிய தீவிரவாதிகளை எதிர்த்து, ஜம்மு காஷ்மீர் மக்கள் உறுதியாக இந்திய மக்களோடு இணைந்து நின்றனர்.

ஆனால் நாடு முழுவதிலும் படித்துக்கொண்டிருந்த ஜம்மு காஷ்மீர் மாநில மாணவர்கள் மீது தாக்குதல் நடைபெற்றது. முஸ்லிம்கள் மீதான வெறுப்பைத் திட்டமிட்டு எல்லா மட்டங்களிலும் பரப்பி வருகின்றனர் என்றார்.

தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமைதான் சிறுபான்மையினரைப் பாதுகாக்கும்; ஆர்எஸ்எஸ் முன்னெடுக்கும் வெறுப்புப் பிரச்சாரத்தைத் தடுத்து நிறுத்தும். தீவிரவாதத்திற்கு எதிராக மக்கள் ஒற்றுமை, வர்க்க ஒற்றுமைக்கான பணிகளை முனைப்புடன் நாம் முன்னெடுக்க வேண்டும் என்றார்.

---

## வேளாண் விளைபொருட்களுக்கு 50% லாப விலை இல்லை

### விவசாயிகளுக்கு மோடி அரசு மீண்டும் துரோகம்

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு :

பொருளாதார விவகாரங்களுக்கான ஒன்றிய அமைச்சரவைக் குழு வரும் கரீப் பருவத்திற்கு வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கான விலையை அறிவித்துள்ளது. வழக்கம் போலவே விவசாயிகளை ஒன்றிய அரசு ஏமாற்றி விட்டது. வேளாண் ஆணையத்தின் தலைவர்வ் பேராசிரியர் எம்.எஸ்.சாமிநாதன் தலைமையிலான குழுவின் பரிந்துரையான C2+50% என்பதை நிராகரித்து வரும் ஆண்டிற்கான விலையை அறிவித்து வழக்கம் போல் விவசாயிகளை ஏமாற்றியுள்ளது.

இந்நிலையில் வேளாண் ஆணையத்தின் விவசாய மொத்த உற்பத்தியில் செலவுடன் 50 சதவீத லாபம் சேர்த்து வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்து வருகிறோம் என 2016 ஆண்டு முதல் ஒன்றிய அரசு அறிவித்து நடைமுறைப்படுத்தியது போல் மோசடி தகிடு தத்தங்களை இந்த ஆண்டும் செய்துள்ளது. வேளாண் ஆணையம் கூறியது என்பது உற்பத்திக்கான இருவகைச் செலவுகளையும் கணக்கிட்டு இத்துடன் கூடுதலாக 50 சதம் சேர்த்து விலையாக அறிவிக்க வேண்டும் என்பதாகும். ஆனால் ஒன்றிய அரசோ தொடர்ந்து C2+50% தவிர்த்து A2+FL+50% படி தான் விலையை அறிவித்து வருகிறது. அதாவது சாகுபடிக்கான செலவுகளை மட்டுமே கணக்கிட்டு இத்துடன் 50 சதம் தொகையைச் சேர்த்து விலையாக அறிவித்து வருகிறது. முதலீட்டிற்கான வட்டி மற்றும் விவசாயிகளின் குடும்பப் பராமரிப்பு பாதுகாப்பிற்குரிய தேவையான நிதியைச் சேர்த்து விலையைத் தீர்மானிக்காது ஏமாற்றுகிறது.

மும்மடங்கு உற்பத்தி இரு மடங்கு லாபம். விவசாயிகளுக்கு ஏற்படுத்துவதே என் லட்சியம் என வாய்ச்சவடால் விட்ட பிரதமர் அறிவித்து பல ஆண்டுகள் கடந்தும் ஒரு மடங்கு லாபத்திற்கே இதுவரை வழியில்லை. வேளாண் தொழில் என்பது இலாபகரமாக இல்லாத நிலையில் விவசாயிகள் தொடர்ந்து இழப்பைச் சந்தித்து வரும் சூழலில் வேறு வழியின்றி விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேறி வருகின்றனர்.

கடந்த ஆண்டு கரீப் பருவத்தில் சோயாபீன்ஸ் விலையைக் குறைத்து நிர்ணயிக்கப்பட்டதால் விவசாயிகள் வேதனை அடைந்து நடப்பாண்டு இதனுடைய சாகுபடி பரப்பைக் குறைத்து சுமார் 20 சதம் விவசாயிகள் மாற்றுப் பயிர்ச் சாகுபடிக்குச் சென்றுவிட்டனர். பின்னர் தேவைக்கு அரசு இறக்குமதி செய்து அந்நியச் செலாவணி மூலம் நிதி இழப்பை அரசுக்கு ஏற்படுத்தியது.

உரம் விலை பன்மடங்கு உயர்வு, மின்சாரக் கட்டணம் உயர்வு, உரம் மானியத்தைக் குறைத்ததால் இதன் விலை உயர்வு, இயற்கைப் பேரிடர் தொடர் பாதிப்பு பல நேரங்களில் அரசு அறிவித்த விலையே கிடைக்காத நிலை விவசாய இடுப்பொருட்களுக்கு வேளாண் கருவிகளுக்கான கூடுதல் ஜி.எஸ்.டி.வரி விதிப்பு, கடன் ஒதுக்கீட்டில் 25 ஆயிரம் கோடி குறைப்பு எனும் சூழலில் கடந்த பா.ஜ.க ஆட்சியின் 10 ஆண்டு காலத்தில் 2 கோடிக்கும் மேல் விவசாயிகள் இறந்துள்ளனர். இந்நிலையில் வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு வெறும் 67 சதம் மட்டுமே விலை உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிலையில் பின் கண்ட உத்தரவாதங்கள் வேண்டும்.

வரும் மழைக்கால நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் சட்டபூர்வ குறைந்தபட்ச C2+50% படி ஆதரவு விலை உத்தரவாதச் சட்டத்தை நிறைவேற்றிட வேண்டும்.

மாநிலப் பங்களிப்புடன் விவசாயிகளை உள்ளடக்கிய பிரதிநிதித்துவத்துடன் சி.ஏ.சி.பி ஐ மறு சீரமைக்க வேண்டும்.

3 இலட்சத்திலிருந்து 5 இலட்சம் ரூபாய் ஆக கடன் வரம்பை உயர்த்துவதாக அரசாங்கம் அறிவித்தபோதும், பெரும்பாலான மாவட்டங்களில் அமல்படுத்தப்படவில்லை.

விவசாயிகளுக்கு உதவிடும் முறையில் வங்கி நிர்வாகத்தைச் சீரமைத்திடவேண்டும்.

வரக்கூடிய நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் சட்டபூர்வக் கொள்முதல் உத்தரவாதச் சட்டம் நிறைவேற்றிட வேண்டும்.

இடைக்கால ஏற்பாடாக, ஒன்றிய அரசு அறிவிக்கவேண்டிய C2 + 50% படியான விலை குறைவு தொகையை, தமிழ்நாடு அரசு ஊக்கத்தொகையாகச் சேர்த்து நெல் குவிண்டால் ரூ.3000 விவசாயிகளுக்குக் கொடுத்திட அறிவித்திட வேண்டும் எனத் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சேலம் மாவட்ட நிர்வாக குழு, மாவட்ட குழு மற்றும் கட்சி உறுப்பினர்கள் மாநில மாநாட்டிற்கு வழங்கிய நிதி

| | |
|---|---|
| பழ.ஜீவானந்தம் 2வது தவணை | 50,000 |
| என்.கே.செல்வராஜ் | 50,000 |
| இரா.ரமேஷ் | 20,000 |
| எஸ்.ராமஜெயம் | 10,000 |
| எல்.ஜி.சி. சண்முகம் | 2,500 |
| எம்.சின்னத்தம்பி | 2,000 |
| காட்டூர் கட்சி கிளை | 10,000 |
| எம்.கம்யூனிசம் | 5,000 |
| எம்.லெனினிசம் | 1,000 |
| எம்.சோசலிசம் | 5,000 |
| கே.வி.மணி | 5,000 |
| எஸ்.மணிகண்டன் | 2,500 |
| எம்.மோகன்ராஜ் | 5,000 |
| கே.கே.கணேசன் | 1,500 |
| கே.சுசீலா | 500 |
| கோபால் | 500 |
| எம்.ஜெகதீஸ் | 1,000 |
| பி.பழனி | 500 |
| பனமரத்துப்பட்டி–வீரபாண்டி ஒன்றிய குழு | 30,000 |
| கொண்டலாம்பட்டி மண்டலக் குழு | 19,000 |
| ஆர்.எல்.முத்துராஜகோபால் | 5,000 |
| எஸ்.வடிவேல் | 2,000 |
| எஸ்.முகமது ஷபி | 3,000 |
| கே.டி.பாலு | 3,000 |
| எம்.கே.விஜி | 1,000 |
| எஸ்.அருணாசலம் | 500 |
| காசிராஜன் | 500 |
| ஜெ.வேலுமணி | 500 |
| முத்துகுமார் | 500 |
| எம்.ஷாநவாஸ்கான் | 5,000 |
| எம்.கணேசன் | 5,000 |
| உ.கந்தசாமி 2வது தவணை | 5,000 |
| சிவக்குமார் மனைவி கலையரசி 2வது தவணை | 5,000 |
| எம்.கண்ணன் | 5,000 |
| எம்.ராஜமோகன் | 2,000 |
| சி.சண்முகம் | 5,000 |
| வெங்கடேஷ் மின்சார அரங்கம் | 10,000 |
| ஜெகநாதன் | 1,500 |
| வாழப்பாடி சந்திரன் மகன் சுதேசி | 500 |
| ஜெ.ஸ்டாலின் | 10,000 |
| மேட்டூர் – மேச்சேரி இசைக்குழு | 6,000 |
| டி.கண்ணன் | 5,000 |
| ஜி.சுந்தர் | 500 |
| எஸ்.சம்பத் | 3,000 |
| மொத்தம் | 3,06,000 |

## ஜனசக்தி மற்றும் கட்சி வளர்ச்சி நிதி



தென்காசி மாவட்டம் ஆயிரபேரியில் நடைபெற்ற விவசாயிகள் சங்க தாலுகா செயலாளர் லட்சுமணன் அவர்களின் மகன் வினேஷ் சோனியா காந்தி திருமண விழாவில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

மணமக்கள் சார்பில் கட்சி வளர்ச்சி நிதியாக 5000 ரூபாயும், ஜனசக்தி வளர்ச்சி நிதியாக 5000 ரூபாயும் மாநிலச் செயலாளரிடம் வழங்கினார்கள். நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் த.இசக்கித்துரை, துணைச் செயலாளர் எஸ்.வேலாயுதம், ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் தி.சுப்பையா, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கிட்டப்பா, பரமசிவம், வேலு, சமுத்திரக்கனி, மாவட்டக் குழு உறுப்பினர்கள் சீனிவாசன், அய்யப்பன், தாலுகா துணைச் செயலாளர் துரைராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# சீன மாணவரிடம் நிழல்

**சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் தனிப்பெரும் ஆற்றலாகத் தன்னை நினைத்துக்கொண்டிருக்கும் அமெரிக்காவின் கனவுகளுக்கு சீனாவின் வளர்ச்சியும் முன்னேற்றமும் புதிய கண்டுபிடிப்புகளும் இன்று தடையாக உருவாகி வருகின்றன.**



மே.து.ரா.

1. உலக வணிகத்தில் அமெரிக்காவின் பங்கு 1970இல் 15% என்றிருந்த நிலை மாறி, 2019இல் அது 9% எனக் குறைந்து, இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது. ஆனால், சீனாவின் பங்கு 12.3% என உயர்ந்துவிட்டது.

3. அண்மையில் அறிவியல் நுட்பத்தின் போக்கினை மாற்றிய 50 மாபெரும் கண்டுபிடிப்புகளில் 30க்கும் மேற்பட்டவை சீனாவில் உருப்பெற்றவையாக இருந்தன என்று அறியப்பட்டது. பத்துக்கும் குறைவாகவே அமெரிக்கக் கண்டுபிடிப்புகள் இருந்தன.

3. தொடர்புநுட்பத்தில், 5ஜியின் வளர்ச்சியை முன்னெடுத்த ஹுவாய் நிறுவனத்தின் ஈடிணையற்ற தன்மைகள்.

4. ஹுவாய் பயன்பாட்டில் 5 என்.எம் சிப்பிகளை மரபு வழியில் அல்லாமல் உருவாக்கிய வகை.

5. ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை மீறிச் செயற்கை நுண்ணறிவுத் துறையில் டீப்சீக் என்ற தொடக்க நிலை நிறுவனம் மாற்று முறையில் உருவாக்கிய வடிவமைப்பின் சிறப்பு.

6. அமெரிக்காவில் படிக்கச் செல்லும் மாணவர்களில் 15% பகுதியினரே 2001இல் கல்வியை முடித்துக்கொண்டு சீன நாட்டிற்குத் திரும்பியிருந்தனர். 2008இல் இது 40% என மிகுந்தது. ஆனால், தற்போது ஏறத்தாழ 80%க்கும் மேலானோர் கல்வியினை முடித்துச் சீனாவுக்குத் திரும்பிவிடுகின்றனர்.

7. பொருள் வளத்தில் அமெரிக்கா 30 பில்லியன் டாலர் அளவில் முதலிடம் பெற்றிருந்தாலும், சீனா 20 பில்லியன் டாலர் என்று வளர்முகத்தில் பிற நாடுகளைப் புறந்தள்ளி இரண்டாவது இடத்துக்கு வந்துவிட்டது. சில ஆண்டுகளில் அமெரிக்காவை மிஞ்சும் என்று மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பின்புலத்தில் அமெரிக்காவின் அச்சத்தையும் நெருக்கடியையும் காணவேண்டியுள்ளது.

சீனாவின் நுட்ப வளர்ச்சியும் உற்பத்தித் திறனும் பெருகி இருப்பதற்கான அடிப்படையே, அமெரிக்கா கண்டுபிடித்த நுட்பங்களையும் உற்பத்தி முறைகளையும் சீன மாணாக்கர் திருடிச் சென்று தங்களது நாட்டின் வளர்ச்சிக்கு வழியமைக்கின்றனர் என்ற எண்ணங்கள், டிரம்ப் போன்றோர் மட்டுமின்றி, நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோரிடமும் அமெரிக்க ஊடகங்களால் பரப்பப்பட்டு, அனைவரது மனதிலும் பதிந்துவிட்டன.

அமெரிக்கா அல்லாத பிறர் பெருமளவில் எதையும் கண்டுபிடிக்க முடியாது என்ற நிலைப்பாடுகளும் பலருக்கு நெஞ்சில் நிலைத்திருக்கிறது.

அமெரிக்கா அல்லாது, அய்ரோப்பியர், இந்தியர் போன்ற நாட்டினரும்கூட, சீனக் கண்டுபிடிப்புகளும் உற்பத்திப் பெருக்கங்களும் பிறர் நுட்ப அறிவைக் கவர்ந்து உருவாக்கப்பட்டவை என்ற மாயையைப் பெரிதும் இன்று வரை நம்பிக்கொண்டிருக்கின்றனர்.

இதற்கான வாய்ப்புகள், சீன மாணவர் வழியாகவே கொண்டுசெல்லப்படுகின்றன என்று நம்புகின்றனர்.

அனைத்துக்கும் அடிப்படை, சீனாவின் நுட்ப வளர்ச்சியும் உற்பத்தித் திறனும்தான் என நினைத்து, அவற்றை முடக்குவதற்காக அமெரிக்காவில் பயிலும் சீன மாணவர்களுக்குக் கட்டுப்பாடுகளை முன்னெடுத்திருக்கிறார் டிரம்ப்.

கடந்த முறை ஆட்சியில் இருக்கும்போது டிரம்ப், சீனப் படையினருடன் தொடர்புடையோர் எனக் கூறி ஏறக்குறைய ஆயிரத்துக்கும் மேற்பட்ட சீன மாணவர்களின் விசா உரிமைகளை நீக்கி, அவர்களை சீனாவுக்கு வெளியேற்றினார்.

அமெரிக்காவில் உள்ள ஆர்வார்டு போன்ற உயர்நிலைப் பல்கலைக்கழகங்கள் மட்டுமல்லாது, பொதுப் பல்கலைக்கழகங்கள், சிறப்பில்லாத சிறு நிறுவனங்கள் போன்றவற்றிலும் வெளிநாட்டு மாணவர் கற்று வருகின்றனர். 2023–24ஆம் கல்வியாண்டில் 210 நாடுகளைச் சார்ந்த 11 லட்சம் மாணவர்கள் அமெரிக்காவில் பயின்று வந்தனர். இவர்களில் இந்திய மாணவர்கள் 3,30,000 பேர். அடுத்து,சீனாவில் இருந்து 2,80,000 மாணவர் சென்றுள்ளனர். இந்த இரண்டு நாடுகளின் எண்ணிக்கை மட்டுமே கூட்டளவில் பெரும் பகுதியாக உள்ளது.

ஆர்வார்டு பல்கலைக்கழகத்தில், போரினால் துன்பறும் பாலத்தீன மக்களுக்குச் சார்பாகவும், இசுரேலின் வன்முறைக்கு மறுப்பாகவும் நடந்த போராட்டங்களில் யூத எதிர்ப்பு முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இவற்றில் அமெரிக்க மாணவர்களும் வெளிநாட்டு மாணவர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர். இதுவும் டிரம்பு கண்களை உறுத்தியது.

வெளிநாட்டு மாணவர்களின் விவரங்களைத் தருமாறு டிரம்ப் அரசு பல்கலைக்கழகத்திடம் கேட்டது. ஆனால், பல்கலைக்கழகம் மறுத்துவிட்டது. இதனையடுத்து, பல்கலைக்கழகத்திற்கான நிதி நல்கை நிறுத்தப்பட்டது. பாலத்தீனத்திற்குச் சார்பாக நின்று, இசுரேல் யூத எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்துகொண்டோர் சீன மாணவர்கள் மட்டுமல்ல. சீன மாணவர்களின் பங்களிப்பு இவற்றில் குறைவு என்றே தெரிகிறது.

இருப்பினும், சீன மாணவர்களது





நுழைவுக்கான விசா ஏற்பினைத் திரும்பிப் பெறும் முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. சீன மாணவர்கள் பிற நாட்டு மாணவர் போலன்றித் தனித்துப் பார்க்கப்படுகின்றனர்.

சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியோடு தொடர்புகொண்டோர் மற்றும் உயர் நுண்ணறிவுக் கல்வியில் பயில்வோர் போன்ற மாணவர்களது விவரங்கள் திரட்டப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளளது.

அதாவது, சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியோடு தொடர்பு உடைய அனைவரும் வேவு பார்க்க வந்தோர் என்றும் உயர் நுண்ணறிவு பயில்வோர் யாவரும் அந்த நுட்பங்களைக் களவாடிச் செல்வோர் என்றும் இப்போது கருதப்படுகின்றனர்.

அகவை ஆறில் இருக்கும்போது இளம் கம்யூனிஸ்டு அமைப்பில் உறுப்பினராக இருந்தவர்கூடக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கான பட்டியலில் சேர்க்கப்பட்டுவருகின்றனர்.

அத்துடன், சீன மாணவர்களது சமூக தளப் பக்கப் பதிவுகளும் ஆய்வு செய்யப்படுகின்றன.

தற்போது அமெரிக்காவில் பயின்றுகொண்டிருக்கும் சீன மாணவர்களது விசாநீக்கத்தினை எதிர்த்துப் பல்கலைக்கழகங்கள் வழக்குகளை நடத்திக் கொண்டிருக்கின்றன.


இதனால், புதிதாக அமெரிக்கக் கல்வி நிறுவனங்களில் இடம் கிடைத்து செல்வோருக்கான விசா மறுக்கப்படுகிறது. ஒருவேளை கிடைத்தாலும், அமெரிக்காவில் இறங்கியவுடன் அவர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர். இதில் நீதிமன்றங்கள் தலையிட இயலாது.



# ல் போர் நடத்தும் டிரம்ப்

அமெரிக்காவில் செயல்படும் கல்வி நிறுவனங்களுக்கு வெளிநாட்டு மாணவர்களின் கல்விக் கட்டணம் போன்ற நிதி வருவாய் அடிப்படை வேண்டலாக இருக்கிறது. இந்தக் கல்வி நிறுவனங்கள் வெளிநாட்டு மாணவர்களின் கல்விக் கட்டண வரவு இல்லாமல் தங்களை நிலைநிறுத்திக்கொள்ள இயலாத நிலையில் இருக்கின்றன.

25% வெளிநாட்டு மாணவர்களைக் கொண்டுள்ள ஆர்வார்டு போன்ற உயர்நிலைப் பல்கலைக்கழகங்கள் வெளிநாட்டு மாணவர் இல்லாமல் வேறு வகையில் தங்களைக் காத்துக்கொள்ள முடியலாம். ஆனால், பிற பல்கலைக்கழகங்கள், சிறு கல்வி நிறுவனங்கள் ஆகியன




வெளிநாட்டு மாணவர்களின் கட்டண வரவின்றிச் செயல்படுவதே கேள்விக்குறியாக இருக்கும்.

அமெரிக்க நாட்டில் பிறந்த இடைநிலை மற்றும் கீழ்நிலை மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் கல்வி பெறவும், வெளிநாட்டு மாணவர்களின் உயர் கட்டணங்களே உதவியாக இருக்கின்றன.

வர்சீனியா பல்கலைக்கழகத்தின் ஒய்வு பெற்ற பேராசிரியர் வில்லியம் பர்சுடைன் என்பார், வெளிநாட்டு மாணவர் மீதான தடைகள், அமெரிக்கா மீதான தாக்குதலாக மாறிவிடும் என்று எடுத்துக்காட்டுகிறார்.

வெளிநாட்டு மாணவர்களின் பங்களிப்பு 2023–24இல் 14.3 பில்லியன் டாலர்களாக இருந்தது. அவர்கள் 3,78,000 பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இதனால், 43.8 பில்லியன் டாலர் அமெரிக்காவின் பொருளிய வளர்ச்சிக்குக் கிடைத்திருக்கிறது என, திறந்த கதவம் என்ற அமைப்பு விவரங்களைப் பகிர்ந்திருக்கிறது.




அறிவியல், நுட்பம், பொறியியல், கணக்கு ஆகிய துறைகளில் வெளிநாட்டு மாணவர்களின் பங்களிப்பு 2021இல் 30%க்கு மேல் இருந்ததாக, காப்புப் புலனாய்வு நிறுவனம் மதிப்பிடுகிறது.

இருப்பினும், வெளிநாட்டு மாணவர் எண்ணிக்கையில் சற்றேறக்குறைய மூன்றில் ஒரு பங்காக இருக்கும் சீனர்கள் தனிமைப்படுத்தப்படுவது ஏன் என்ற வினா எழலாம்.

உயர் கட்டணத்துடன் அமெரிக்கா செல்லும் பிற நாட்டு மாணவர்கள் பெரிதும் செல்வ நிலையில் உள்ளோர். பயணச் செலவு, மிகு கட்டணங்கள் ஆகியவற்றை ஏற்கக்கூடிய நிலையில் இருப்பவர்தாம் அமெரிக்கக் கனவுகளைக் காண முடியும்.

இவர்கள் அனைவரும் கல்வியினை முடித்த பின்னர், பெரிதும் அமெரிக்காவில் பணியில் சேர்ந்து, குடியுரிமை பெறும் எண்ணங்கள் கொண்டவராகவே இருக்கின்றனர்.

ஆனால், கல்விக்காக அமெரிக்கா செல்லும் 80% சீன மாணவர்கள் தங்கள் நாட்டுக்குத் திரும்பிவிடுகின்றனர். 2011இல் இந்த எண்ணிக்கை 15% மட்டுமே இருந்தது. 2008க்குப் பிறகு இது 40% என உயர்ந்து படிப்படியாக வளர்ந்திருக்கிறது.

கடந்த 20 ஆண்டுகளில் சீனாவின் கட்டமைப்புகள், தொழில்கள், வாழ்முறை என யாவும் பிற வளர்ந்த நாடுகளைக் காட்டிலும் பெரிதும் முன்னேறியுள்ளன. கற்ற கல்வியைப் பயன்படுத்தும் வேலை வாய்ப்புகளும் அங்கு பெருகியிருக்கின்றன.

இதனால், அமெரிக்கா செல்லும் சீன மாணவர்களின் எண்ணிக்கை கடந்த நான்கு ஆண்டுகளில் 25% அளவுக்குக் குறைந்திருக்கிறது.

அமெரிக்காவைப் போன்று தரத்திலும் தகுதியிலும் பெருமை கொண்ட பல கல்வி நிறுவனங்கள் சீனாவில் செயல்படுகின்றன. உலக அளவிலான தரவரிசைப் பட்டியலில் அவை அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுக்கு மேலாக மதிப்பிடப்பட்டு வருகின்றன.

ஆனால், மேம்பட்ட நிறுவனங்களில் இடம் பெற இயலாதோர் மட்டுமே இப்போது கல்விக்காக அமெரிக்காவை நாடுகின்றனர் என்று விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலை இந்தியாவிலும் இருக்கிறது. அய்.அய்.டி. போன்ற உயர் நிறுவனங்களில் தகுதி அடிப்படையில் இடம்பெற இயலாதோர்தாம் பெருமளவில் அமெரிக்காவுக்குச் செல்கின்றனர். ஆயினும், அய்.அய்.டி.யில் படித்து உயர் கல்வி பெற்றோர் அடுத்து அமெரிக்க நிறுவனங்களில் புகுந்து பறந்து விடுகின்றனர்.

உயர்கல்வி நிறுவனங்களை உருவாக்கிய இந்தியா, அங்கு படித்தோருக்காகப் பணி வாய்ப்புகளை உருவாக்கி வைத்திருக்கவில்லை என்பது வியப்பான உண்மை.

இங்கிலாந்து, கனடா, ஆத்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள நிலை வேறு. அங்கு கடந்த பல ஆண்டுகளாக வெளிநாட்டு மாணவர்களுக்கான தடைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் இந்திய மாணவர்களுக்கான கட்டுப்பாடுகளைக் கனடா அறிவித்தது.

இங்கிலாந்தில் வெளிநாட்டு மாணவர்களுக்கான கட்டுப்பாடுகளை விரிவாக்கியபோது, சேர்க்கைக் குறைவால் உள்நாட்டு மாணவர்களுக்கான கல்விக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. இதனை எதிர்த்து நீண்ட போராட்டங்கள் நடைபெற்றன.

வெளிநாட்டினரின் வருகையால் உள்நாட்டில் வேற்று இனத்தாரின் எண்ணிக்கை கூடிவிடுவதை அந்த நாட்டு அரசுகளும் விரும்பவில்லை.

இன ஒதுக்கல் என்பதில் தொடங்கி, உள்நாட்டில் நிலவி வரும் இருப்பினைக் காக்கும் முயற்சிகள் அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடியேற்ற நாடான அமெரிக்காவிலும் இத்தகைய நிலைமைகள் இருந்தபோதிலும், அங்கு சீன மறுப்பு மட்டுமே முன்னெடுக்கப்படுகிறது.

அமெரிக்காவில் வந்து பயின்று, நுட்பங்களை அறிந்து, பின்னர் சீனா திரும்பிச் சென்ற பிறகு அவற்றைப் பயன்படுத்தக்கூடிய நிலையில் சீனா இப்போது இல்லை. அமெரிக்காவைக் காட்டிலும் நுட்ப அளவில் மேம்பட்டோரை உருவாக்கிக்கொள்ளும் அளவில் சீனா வளர்ச்சி பெற்றுவிட்டது.

செயற்கை நுண்ணறிவு, மின்வண்டிகள், மின்கலன்கள், சிப்பிகளின் உருவாக்கம், தொலைத்தொடர்பு, விண்வெளி ஆய்வுகள், இயந்திர மனிதன் என்பன போன்ற இன்னும் பல்வேறு நுட்பங்களில் சீனா முன்னிலையில் நிற்கிறது.

இவை யாவும் அமெரிக்காவில் படித்துவிட்டு வந்தோர் மட்டும் உருவாக்கித் தந்தவையாக இருக்கவில்லை.

தொடக்கத்தில் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளின் நுட்பங்களை சீனா நாடியிருக்கலாம். இன்று அந்த நிலை மாறிவிட்டது.

டிரம்ப் மட்டுமல்லாது, அமெரிக்கர்களும் அய்ரோப்பியரும் முதலில் இவற்றையெல்லாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அமெரிக்கா இல்லை என்றாலும் வேறு நாடுகளுக்குச் சீன மாணவர்கள் செல்ல முடியும். அல்லது சீனா தனது கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்ள இயலும்.

சீனாவை எதிர்த்து டிரம்ப் நிழல் போர் நிகழ்த்திக்கொண்டிருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

**தொடர்புக்கு : 9444075561**

## எவ்வளவு பயங்கர கொடூரமான உலகில் நாம் வாழ்கிறோம்... பாருங்களேன்...



குஜராத்தின் அம்ரேலி மாவட்டத்தில் உள்ள ஒரு இடைநிலை (OBC) சாதியைச் சேர்ந்தவரின் கடையில்... கடைக்காரரின் மகனான டீனேஜர் மைனர் சிறுவனை... கடைக்குப் பொருட்கள் வாங்க வந்த ஒருவர் பாசத்தோடு.... "பேட்டா" (மகனே)" என்று அழைத்து, கொக்கியில் மாட்டித் தொங்கவிடப்பட்ட சிற்றுண்டி பாக்கெட் பொருட்களை எடுத்துத் தருமாறு அன்பாகக் கேட்டுள்ளார்.

அவ்வளவுதான்.

'ஒரு தலித் எப்படி தன் மகனை "பேட்டா" என்று அழைக்கலாம்?' என்று... சாதி வெறி பிடித்த அந்தக் கடைக்காரன் மற்றும் அந்த மிருகத்தின் சாதியைச் சார்ந்த 10 நண்பர்கள் சேர்த்து அந்தத் தலித் வாடிக்கையாளரை... கடையில் விற்க வைக்கப்பட்டிருந்த இரும்புக் கரண்டிகள் போன்றவற்றை ஆயுதங்களாக்கி அடித்துத் தாக்கி, மிதித்துக் கும்பல் படுகொலை செய்துள்ளனர்.

அவரின் பெயர் நிலேஷ் ரத்தோட்.

"பிரதமர் குஜராத்தைச் சேர்ந்தவர்,

உள்துறை அமைச்சர் குஜராத்தைச் சேர்ந்தவர், ஆனால்... அவர்கள் ட்வீட் செய்து தங்கள் இரங்கலைத் தெரிவிப்பதில்லை. இதுபோன்ற சம்பவங்கள் நடக்கும் போதெல்லாம், குஜராத்தின் சமூக நீதித் துறை அமைச்சர், உள்துறை அமைச்சர் அல்லது முதல்வர் ஒருபோதும் பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீரைத் துடைக்கச் செல்வதில்லை. தலித் அமைப்புகள் மற்றும் அம்பேத்கரிய இயக்கத்தைச் சேர்ந்த எங்களைப் போன்றவர்கள்தான் நேரில் சென்று பார்த்து அதுபற்றிப் பேச வேண்டியுள்ளது. வாய் மூடியுள்ள இந்த பாஜக அரசாங்கத்திற்குச் சாதிய மனநிலை உள்ளது," என்று குஜராத் காங்கிரஸ் எம்.எல்.ஏ ஜிக்னேஷ் மேவானி கடுமையான குற்றம்சாட்டியுள்ளார்.

கடைக்காரரும் வேறு சில ஆண்களும், நிலேஷ் ரத்தோட் மற்றும் அவருடன் கடைக்கு வந்த இன்னொரு தலித் (மன்ஷுக் சவுகான் இவர்தான் புகார் தாரர்) ஆணையும் அடித்ததாகவும், "கீழ் சாதியைச் சேர்ந்தவராக" இருந்தபோதிலும் அவர்கள் தங்களைக் கடைக்காரருக்குச் சமமாக "மிகைப்படுத்தி" கேலி பேசியதாக முதல் தகவல் அறிக்கை (FIR) கூறுவதாக... 'the wire' தெரிவித்துள்ளது.

இந்திய அரசியலமைப்பின் படி, அனைத்துக் குடிமக்களும் சமம் மற்றும் சட்டங்களின் சமமான பாதுகாப்பிற்கு உரிமை உண்டு. இந்தக் கொள்கை பிரிவு, சட்டம் எண் 14 இல் பொறிக்கப்பட்டுள்ளது. இது மதம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாட்டைத் தடை செய்கிறது.

இந்தச் சாதி வெறிக் கும்பல் படுகொலையில்.... மொத்தம் 11 பேர் சம்பந்தப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 9 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் போலீசார் தெரிவித்ததாக இந்தியன் எக்ஸ்பிரஸ் கூறுகிறது.

'ஹே ராம்' என்று கடவுளைப் போற்றிய, 'காந்தியின் இந்தியாவில்' அனைவரும் சமம்.

ஜெய் ஸ்ரீ ... என்று கூவுது,

கூவத் தூண்டுவது சங்கிகளின் தரம் தாழ்ந்த அறமற்ற வெறுப்பு அரசியலே.

அறத்தை, எதிர்பார்க்க முடியாது, எதிர்பார்க்கக் கூடாது.

# நூல் நயம்

## தொல்காப்பியம் தமிழகம்




தமிழர்களின் பழங்கால இலக்கண நூல் தொல்காப்பியம் என்று அறிகிற போது, தமிழின் இலக்கிய வளத்தை நாம் புரிந்து கொள்ளலாம். ஆதிகால தமிழர்கள் நாகரீகம் மிக்கவர்களாக இருந்தனர். இவர்கள் மேல் நாட்டினரைவிடக் கல்வி, கேள்வி, பலவகை அறிவாற்றல் போன்றவற்றில் சிறந்து விளங்கினர். இசை, நாடகம், ஓவியம், சிற்பம், இசைக்கருவிகள் செய்தல், ஆயுதங்கள் செய்தல், நெசவுத்தொழில் ஆகியவற்றில் தமிழர்கள் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். எழுத்து, சொல், பொருள் எனும் மூன்று அதிகாரங்களைக் கொண்டது தொல்காப்பியம். மக்களது வாழ்க்கையை அகம், புறம் எனப் பிரித்தால் அகப்பொருளில், அகவாழ்வைப்பற்றியும். புறப்பொருளில், புறவழ்வைப் பற்றியும் தொல்காப்பியம் எடுத்துரைக்கிறது. தமிழகத்தில் நால்வகைப் படைகள் இருந்தன. தேர்ப் படை, யானைப் படை, குதிரைப் படை, காலட்படை ஆகும். தமிழர்களுக்குக் கப்பல் கட்டுமானத் தொழிலும் தெரிந்திருந்தது.

தொல்காப்பியர் கால எழுத்துக்களின் வடிவம் இப்போது மாறி, எழுத்துச் சீர்திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தொல்காப்பியம் பண்டைய தமிழகத்தை நாம் பார்க்க உதவும் கண்ணாடியாகும். தொல்காப்பியக் காலத்தில் இயல், இசை, நாடகம் ஆகிய கலைகள் மட்டுமல்ல, நெசவு உட்பட வேறு பல கலைகளும் வளர்ந்து இருந்தன. ஆயக்கலைகள் 64 வளர்ந்திருந்தன. இக்கலைகளோடு 64 தொழில்களும் வளர்ந்து இருந்தன.

"ஆடுவதிலே தேர்ந்த கூத்தரும், பாடுவதிலே சிறந்த பாணரும், புகழ் கூறுவதிலே வல்ல பொருநரும், எல்லாவற்றிலும் தேர்ந்த விறலியும் ஆகிய இந்த நால்வரும் வழியிலே தாம் கண்ணெதிரே தோன்றிய வரியோர்க்கு, தாம் யாரிடத்திலே செல்வம் பெற்றோம் என்பதைக் கூறி அவரிடத்தில் சென்று செல்வம் பெரும்படிக் கூறியுள்ளனர்". இப்படி ஆடல், பாடல், கூத்து கலையுடன் தமிழ்ச் சமூகம் இருந்துள்ள அதே சமயம், யாசித்து வாழ்ந்த சில மக்கள் பிரிவினரும் இருந்ததை தொல்காப்பியம் வழி நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. உலகத்தில் ஆதி குடிகளில், தமிழ் குடியும் ஒன்று என்பதை நாம் அறுதியிட்டுச் சொல்ல முடியும். பல விவரங்கள் இந்நூலில் உள்ளன. இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்கவும்.

**– இன்சுவை பாரதி**

**நூலாசிரியர்** : பசுமைகுமார்
**பக்கம்** : 88 விலை : 90
**வெளியீடு** : 233, வாசுகி நகர், 3வது தெரு, வள்ளுவர் காலனி, தபால் தந்தி நகர், மதுரை 625017.

## தென்னை மரம் பேசுகிறேன்!




மனிதன் நெருக்கடியான காலகட்டத்தில் தன்னை எவ்வாறு தற்காத்துக் கொள்கிறான் என்பதற்கு தென்னை மரம் பேசுகிறேன் என்கிற சிறுகதை ஒரு நல்ல உதாரணமாக உள்ளது. போதைக் கலாச்சாரம் என்பது மனித நாகரீகச் சமூகத்தை வெட்கித் தலைகுனியும் படி செய்து கொண்டிருக்கிறது. போதைக்கு ஆளான மனிதன் எப்படிச் சமூகத்திற்கு ஒரு அச்சுறுத்தலாக மட்டும் இல்லாமல், தொல்லையாகவும் இருக்கிறான் என்பதை ஆண் போதை, பெண் பேதை கதை தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. போதை ஒழுக்கச் சீர்கேடுக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்து விடுகிறது. பெரும் சமூக அவலம் என்பது, இன்றைக்குப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் கூட போதைக் கலாச்சாரத்திற்கு ஆளாகி வருகிற கொடுமையை காணுகிற போது, நம்மால் விம்மி அழாமல் இருக்க முடியவில்லை. எனவே இந்த மதுக் கலாச்சாரத்தில் இருந்து இளைஞர்களை, மாணவர்களைப் பாதுகாப்பது மிகவும் முக்கியம். இதைத்தான் வள்ளுவப் பெருந்தகை ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வலியுறுத்திச் சென்றுள்ளார்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் குழந்தைகள்தான். அவரவர் சுற்றத்திற்கு, குடும்பத்திற்கு குழந்தைகள்தான். ஆனால் அந்த மனிதர்களுக்கு ஒரு குழந்தை இல்லை என்றால், இந்தச் சமூகம் அவர்களைப் பாடாய்ப்படுத்தி விடுகிறது. எனவே ஒருவருக்குக் குழந்தை இல்லை என்பதைக் குறையாக்கி விடாமல், இருக்கிற குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்ப்பது சமூகத்திற்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதைக் குழந்தை சிறுகதை வலியுறுத்துகிறது. இப்படிச் சமூகத்துக்குத் தேவையான நல்ல பல கருத்துகளை, முற்போக்குக் கருத்துகளை இந்த நூல் முழுவதும் நூலாசிரியர் வலியுறுத்தி உள்ளார். இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்கவும்.

**– சமரன்**

**நூலாசிரியர்** : ஞா.சிவசாமி
**பக்கம்** : 160 விலை : 120
**வெளியீடு** : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50

## அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வழக்கு தீர்ப்பு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

அண்ணா பல்கலைக்கழகத்தில் பயின்று வந்த மாணவி, 2024 டிசம்பர் 23 ஆம் தேதி அன்று மாலை அவரது சக மாணவருடன் பேசிக் கொண்டிருந்த போது, மர்ம நபரால் கடத்தி, பாலியல் வன்தாக்குதலுக்கு உள்ளானார். பாதிக்கப்பட்ட மாணவி அருகில் உள்ள கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் டிசம்பர் 24 ஆம் தேதி புகார் செய்தார். புகார் மீது காவல் துறை விரைந்து நடவடிக்கை எடுத்து, டிசம்பர் 25 ஆம் தேதி குற்றவாளி ஞானசேகரன் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்தை பாஜக, அஇஅதிமுக உள்ளிட்ட சில அமைப்புகள் அரசியலாக்கி ஆதாயம் தேடும் செயலில் ஈடுபட்டன. வழக்கை மத்திய புலானய்வுத் துறைக்கு மாற்ற வேண்டும் என உயர்நீதிமன்றத்தில் முறையிட்டன. உயர்நீதிமன்றம் மூன்று பெண் இந்திய காவல் பணி அதிகாரிகள் கொண்ட சிறப்பு விசாரணைக் குழு அமைத்தது. பாதிக்கப்பட்ட மாணவிக்கு இடைக்கால இழப்பீடாக 25 லட்சம் ரூபாய் வழங்க வேண்டும் என தீர்ப்பளித்து, சிபிஐ விசாரணை கோரிக்கையை தள்ளுபடி செய்தது. பெண் ஐபிஎஸ் அதிகாரிகளின் சிறப்பு விசாரணைக் குழு ஜனவரி 2 ஆம் தேதி பல்கலைக்கழக வளாகம் சென்று விசாரணையைத் தொடங்கியது. பிப்ரவரி 24 ஆம் தேதி குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை ஏப்ரல் 23 ஆம் தேதி முதல் நாள்தோறும் விசாரணை நடத்தி, ஆரம்பத்தில் கைது செய்யப்பட்ட ஞானசேகரன் மீதான 11 குற்றச்சாட்டுகளும் நிரூபணம் செய்யப்பட்டு, அவரை குற்றவாளி என 28.05.2025 ஆம் தேதி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த பாலியல் வன்தாக்குதல் தொடர்பான வழக்கை விரைந்து விசாரித்து, நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களையும், சாட்சியங்களையும் உறுதி செய்து, குற்றங்களை நிரூபணம் செய்த காவல்துறையின் நடவடிக்கை சிறப்பானது. குறிப்பாக சிறப்பு புலானாய்வு குழுவின் பெண் அதிகாரிகள் விரைந்த விசாரணை பாராட்டத்தக்கது.

பாதிக்கப்படும் பெண்கள் சட்ட ரீதியாக அதனை எதிர்கொள்ளும் துணிவுக்கு வழி வகுத்துள்ளது. இதன் தொடர்ச்சியாக இன்று (02.06.2025) குற்றவாளி ஞானசேகரனுக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 90 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து சென்னை மகளிர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

## வள்ளுவர், சனாதன தர்மத்தின் துறவியா?

### ஆளுநர் பேச்சுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

திருவள்ளுவர் சனாதன தர்மத்தில் பெரிய துறவி என்ற ஆளுநர் பேச்சுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திருச்சி அருகில் கோயில் திருப்பணி அடிக்கல் நாட்டு விழாவில் பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி உலகப் பொதுமறையாம் திருக்குறள் தந்த வள்ளுவரை, சனாதன தர்மத்தின் மிகப் பெரிய துறவி என்று கூறி இழிவுபடுத்தியுள்ளார். திருக்குறளின் மேன்மை அறிந்த மகாகவி பாரதி, வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு என அவரைப் போற்றிக் கொண்டாடினார்.

நோபல் பரிசு பெற்ற ஆல்பர் சுவைட்சர் "வள்ளுவரின் அறநெறியில் காணும் பேரறிவு, உலக இலக்கியங்களில் அரிதாகவே இருக்கிறது" எனக் குறிப்பிட்டுள்ளார். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் திருக்குறளை மொழிபெயர்ப்பு செய்த ஜி.யூ.போப் "மொழி, இனம், சமயம், நாடு என எல்லா எல்லைகளையும் அனைத்துலக மனிதனைப் பற்றிப் பாடியவர் வள்ளுவர்" என்கிறார்

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்துகெடுக உலகியற்றியான்" எனக் கற்பனைக் கருத்தியலைச் சாடி, உழைப்பின் மேன்மை குறித்துத் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறி, மெய் ஞானம் போதித்த வள்ளுவரை ஆன்மிகம் என்ற பெயரில் மனிதர்களுக்கு மதவெறியூட்டி, பகையும், வெறுப்பும் வளர்த்து வரும், சனாதனக் கும்பலின் மூலவராகக் காட்ட முயற்சிக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவி அறிவிலித்தனமாகப் பேசி வருவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஒருங்கிணைந்த மருத்துவப் படிப்பை ஜிப்மரில் தொடங்கும் திட்டத்தை ஒன்றிய அரசு கைவிட வேண்டும்

### சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் வலியுறுத்தல்

நவீன அறிவியல் மருத்துவப் படிப்புடன், ஆயுர்வேதா படிப்பை இணைத்து, ஒருங்கிணைந்த மருத்துவப் படிப்பை ஜிப்மரில் தொடங்கும் திட்டத்தை ஒன்றிய அரசு கைவிட வேண்டும் என்று சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் ஒன்றிய அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒன்றிய பாஜக அரசு ஒருங்கிணைந்த மருத்துவ முறை என்ற பெயரில் 2030ம் ஆண்டுக்குள், ஒரு மருத்துவ முறையைக் கொண்டு வருவதாக அறிவித்துச் செயல்பட்டு வருகிறது. இந்தியாவை இந்து நாடாக மாற்ற வேண்டும், அந்த நாட்டிற்கான ஒரு இந்து மருத்துவ முறையாக, மதச்சார்பற்ற ஆயுர்வேதாவை மாற்ற வேண்டும் என்ற நோக்கில் ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது.

மருத்துவக் கல்வியை இந்துத்துவ மயமாக்கும் முயற்சியில் ஒன்றிய அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. இது தவறான நடவடிக்கையாகும். அறிவியலும் ஆன்மீகமும் ஒன்றாகப் பயணிக்க முடியாது. உலக அறிவியல் வரலாறு இதை உறுதி செய்துள்ளது. நவீன மருத்துவ முறைக்கு மாற்றாக, எம்பிபிஎஸ் மற்றும் பிஏஎம்எஸ் படிப்புகளை ஒருங்கிணைத்த மருத்துவப் படிப்பை தொடங்கிட முயல்கிறது. அப்படிப்பட்ட ஓர் படிப்பை, ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் தொடங்க உள்ளதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

நவீன மருத்துவ அறிவியல் என்பதே ஓர் ஒருங்கிணைந்த அறிவியல் முறைமையாகும். எந்த அறிவியலும் தனித்து இயங்கிட முடியாது. அறிவியலும், தொழில்நுட்பமும் கூட தனித்தியங்கிட முடியாது. இந்நிலையில் நவீன மருத்துவ அறிவியலைத் தனி அறிவியலாகக் கருதுவதும், காலாவதியான பல கோட்பாடுகளைக் கொண்ட ஆயுர்வேதாவை, அதற்கு இணையான தனி அறிவியலாகக் கருதுவதும் தவறாகும். அவற்றை ஒன்றிணைக்க வேண்டும் என்பது அறிவியல் நடைமுறைகளுக்கு எதிரானதாகும்.

நவீன அறிவியல் மருத்துவம் எந்த ஒரு தனிப்பட்ட நாட்டிற்கோ, மதத்திற்கோ, இனத்திற்கோ, மொழிக்கோ, சமூகத்திற்கோ சொந்தமான ஒன்றல்ல. அது ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் சொந்தமானதாகும். அது உலகளாவிய மருத்துவமாகும். அத்தகைய நவீன அறிவியல் மருத்துவத்தை, ஒழித்துக்கட்ட ஒன்றிய அரசு முயல்வது கடும் கண்டனத்திற்குரியது.

அறிவியலற்றவைகளை, ஆதி அறிவியல்களை, காலாவதியான அறிவியல்களை, போலி அறிவியல்களை, ஆன்மீகத்தை, சோதிடத்தை, மூடநம்பிக்கைகளை, தவறான நம்பிக்கைகளை, நவீன அறிவியல் மருத்துவத்தில் இணைத்து, ஒருங்கிணைந்த மருத்துவ முறை என்ற ஒன்றை, ஒன்றிய பாஜக அரசு கொண்டுவர முயல்வதை ஏற்க முடியாது. மோடி அரசு தனது இந்துத்துவா திட்டத்தை மருத்துவத்தில் திணிப்பது கூடாது. அது, இந்திய மக்களுக்குத் தரமான மருத்துவச் சிகிச்சைகள் கிடைப்பதைக் கெடுத்துவிடும். பல்வேறு பிரச்சினைகளையும், குழப்பங்களையும் உருவாக்கும்.

உலக அரங்கில் இந்திய மருத்துவர்கள் மற்றும் மருத்துவத்தின் மீது உள்ள நம்பிக்கையைத் தகர்க்கும். எனவே, ஒருங்கிணைந்த மருத்துவப் படிப்பு, ஒருங்கிணைந்த மருத்துவ முறை என்ற பிற்போக்கான நடவடிக்கையை உடனடியாகக் கைவிட வேண்டுமெனச் சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# சிபிஐ கட்சியின் ஒன்றிய, கிளை மாநாடுகள்

**இராஜபாளையம் நகரம்:** ரமேஷ், கோவிந்தன், விஜயலட்சுமி ஆகியோர் தலைமையில் இராஜபாளையம் நகர மாநாடு நடைபெற்றது. மூத்த தோழர் காளையப்பன் கட்சிக் கொடி ஏற்றினார். சிவதரணி அஞ்சலித் தீர்மானத்தை வாசித்தார். மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார் மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசினார். மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி, நிர்வாகக் குழு உறுப்பினர்கள் இரவி, முத்துமாரி, வரதராஜன், கணேசமூர்த்தி, பகத்சிங் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

மறைந்த தோழர்கள் ரத்தினம், கோவிந்தன் குடும்பத்தினருக்கும், அய்யாத்துரை, குருசாமி கிருஷ்ணன், காளிமுத்து ஆகியோருக்குப் பயனாடை அணிவித்து மரியாதை செய்து, ரூ.5000 வழங்கப்பட்டது. இதில் செயலாளராக விஜயன், துணைச் செயலாளராக வேலுச்சாமி, பொன்ராஜ், பொருளாளராக முருகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

நகராட்சி சொத்து வரி மற்றும் குடிநீர் வரி உயர்வைத் திரும்பப் பெற வேண்டும். இபிஎஃப் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை ரூ.9000 ஆக உயர்த்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**வெம்பக்கோட்டை ஒன்றியம்:** ஆலங்குலத்தில் பாண்டி, மாரியப்பன் ஆகியோர் தலைமையில் மாநாடு நடைபெற்றது. வி.அழகிரிசாமி எக்ஸ் எம்.பி கட்சிக் கொடி ஏற்றினார். மாவட்டத் துணைச் செயலாளர் செந்தில்குமார் தொடங்கி வைத்தார். தேசியக் குழு உறுப்பினர் இராமசாமி எக்ஸ் எம்.எல்.ஏ, நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பொன்னு பாண்டியன் எக்ஸ் எம்.எல்.ஏ, இரவி, முத்துமாரி, கணேசமூர்த்தி, பகத்சிங், வரதராஜன் உள்ளிட்டோர் பேசினார்கள்.

இதில் ஒன்றியச் செயலாளராக நடராஜன், துணைச் செயலாளராக பாண்டி, மகாலிங்கம், பொருளாராக ஜெயபிரகாஷ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். வெம்பக்கோட்டை அணை மற்றும் கண்மாய்களில் உள்ள வேலி கருவேல மரங்களை அகற்ற வேண்டும், ஆலங்குளம் அரசு சிமெண்ட் ஆலையில் எம் சாண்ட்பிளாண்ட் பணியை விரைவுபடுத்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**வத்திராயிருப்பு வட்டம்:** குன்னூரில் மகாலிங்கம், தனலட்சுமி, இலங்கேஸ்வரன் ஆகியோர் தலைமையில் மாநாடு நடைபெற்றது. கட்சிக் கொடியை வி.அழகிரிசாமி எக்ஸ் எம்.பி ஏற்றி வைத்தார். அஞ்சலித் தீர்மானத்தை ராமதாஸ் வாசித்தார். தங்கராஜ் வரவேற்றுப் பேசினார். மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசினார். தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, பொன்னு பாண்டியன் எக்ஸ் எம்.எல்.ஏ, மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், விதொச வரதராஜன், இளைஞர் பெருமன்ற பகத்சிங், ஏஐடியுசி இரவி ஆகியோர் பேசினார்கள். இதில் வட்டச் செயலாளராக கோவிந்தன், துணைச் செயலாளராக மகாலிங்கம், பொருளாளராக மாரிமுத்து ஆகியோர் தேர்வு செய்யப்பட்டார்கள்.

மீன்பிடித் திருவிழாவை நடத்த வேண்டும், தேனி வருசநாடு மலைப்பாதைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும், வத்திராயிருப்பில் நீதிமன்றத்திற்குக் கட்டிடம் கட்ட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீர்மான விளக்கப் பொதுக்கூட்டத்தில், மூத்த தோழர் நி.செல்லையா பயனாடை அணிவித்துப் பாராட்டப்பட்டார்

**திருவில்லிபுத்தூர் வட்டம்:** வைத்தியலிங்காபுரத்தில் எம்.ராமசாமி தலைமையில் நடைபெற்றது. மூத்த தோழர் மூர்த்தி கொடியை ஏற்றினார். வழக்கறிஞர் பால்ராஜ் அஞ்சலித் தீர்மானத்தை வாசித்தார். மாவட்டச் செயலாளர் லிங்கம் மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசினார். தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி நிறைவு செய்து பேசினார். வி.அழகிரிசாமி எக்ஸ் எம்.பி, பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்.எல்.ஏ, மாவட்ட துணைச் செயலாளர் செந்தில்குமார், மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், ஏஐடியுசி முத்துமாரி, விதொச வரதராஜன், இளைஞர் பெருமன்றம் மாவட்டச் செயலாளர் பகத்சிங், மாநிலக் குழு உறுப்பினர் கோவிந்தன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். இதில் வட்டச் செயலாளராக பலவேசம், துணைச் செயலாளராக செல்வம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

பள்ளி நேரங்களில் கூடுதல் பேருந்து இயக்க வேண்டும், பல்லாண்டு காலம் கோவில் நிலங்களில் குடியிருப்போருக்குப் பட்டா வழங்கிட வேண்டும், கிராமப்புறச் சாலைகளைச் செப்பனிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருவெறும்பூர் ஒன்றியம்:** துவகுடி மலையில் கலியபெருமாள், லீமாரோசி, சிவசங்கரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டுக் கொடியை முன்னாள் மாநிலக் குழு உறுப்பினர் செல்வராஜ் ஏற்றிவைத்தார். மாநாட்டைத் தொடங்கி வைத்துச் செயற்குழு உறுப்பினர் பத்மாவதி உரை நிகழ்த்தினார். மாநாட்டைப் புறநகர் மாவட்டச் செயலாளர் ராஜ்குமார் வழிநடத்தினார்.

மாநாட்டை வாழ்த்தி போக்குவரத்து சம்மேளனத் துணைப் பொதுச் செயலாளர் சுப்ரமணியன், புறநகர் மாவட்டப் பொருளாளர் பக்ரிசாமி, நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன், மாதர் சங்க மாவட்டச் செயலாளர் மாரியம்மாள் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். ஒன்றியச் செயலாளராக பழனிசாமி, துணைச் செயலாளர்களாக தமிழரசன், ராதாகிருஷ்ணன், பொருளாளராக ஜெயராமன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர். புதிய நிர்வாகிகளை வாழ்த்தி தமிழ்நாடு விவசாயச் சங்க மாநிலத் துணைச் செயலாளர் இந்திரஜித் உரை நிகழ்த்தினார்.

திருச்சி பால்பண்ணை முதல் துவாக்குடி வரையிலான 14.5 கிலோமீட்டர் தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும் சர்வீஸ் சாலை அமைத்திட வேண்டும்.

கிருஷ்ணசமுத்திரம் ஊராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணியினை உடனடியாகத் தொடங்கிட வேன்டும். திருவெறும்பூர்ரயில்நிலையத்தில் அனைத்து எக்ஸ்பிரஸ் ரயில்களும் நின்று செல்ல வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

**மணச்சநல்லூர் ஒன்றியம்:** திருச்சி புறநகர் மாவட்டம் மணச்சநல்லூர் ஒன்றிய ஒன்பதாவது மாநாடு மணச்சநல்லூரில் செல்வராஜ், முகமது, பரிமிளா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியை சின்னதம்பி ஏற்றினார். மாநாட்டைத் தொடங்கி வைத்துப் புறநகர் மாவட்டத் துணைச் செயலாளர் பழனிசாமி உரை நிகழ்த்தினார். மாநாட்டை வாழ்த்திப் புறநகர் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஜனசக்தி உசேன் உரை நிகழ்த்தினார்.

ஒன்றியச் செயலாளராக கருணாநிதியும், துணைச் செயலாளர்களாக பொன்ராஜ், விஜயகுமாரும், பொருளாளராக கலையரானும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்து புறநகர் மாவட்டச் செயலாளர் ராஜ்குமார் உரை நிகழ்த்தினார். இருங்கானூர் ஊராட்சியைப் பேரூராட்சியாக்காமல், இரண்டாகப் பிரித்து, கருங்களம், புறத்தாக்குடி தனி ஊராட்சியாக்க வேண்டும்.

இருங்கானூர் புறத்தாக்குடி பகுதிகளில் பட்டா இல்லாத குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்பன உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**சீர்காழி ஒன்றியம்:** கட்சியின் சீர்காழி ஒன்றிய 30வது மாநாடு எஸ்.சுந்தரய்யா, வி.தங்கராசு, ஆர்.இந்திராகாந்தி தலைமையில் நடைபெற்றது. இதில் மருதையன் கொடியேற்றினார். வித்யா தேவி வரவேற்றார். எம்.பிரபாகரன் இரங்கல் தீர்மனத்தை வாசித்தார். மாவட்டச் செயலாளர் அ.சீனிவாசன் எம்.செல்வராசு எம்.பி படத்திற்கு மாலை அணிவித்தார். மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி சிறப்புரை ஆற்றினார்.

ஒன்றியச் செயலாளராக வே.நீதிசோழன், துணைச் செயலாளராக பிரதாப், பொருளாளராக எஸ்.சுந்தரய்யா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். தமிழக அரசு கோயில் மடம், புறம்போக்கு இடத்தில் குடியிருப்போருக்கு வகை மாற்றம் செய்து குடிமனை பட்டா வழங்கிட வேண்டும், இசை மாமணி சீர்காழி கோவிந்தராஜனுக்கு மணிமண்டபம் அமைத்திட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**சத்தியமங்கலம் வடக்கு ஒன்றியம்:** எஸ்.ஜான், சி.சிவானந்தம், ஆர்.சித்ரா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. அஞ்சலித் தீர்மானத்தை சி.கே.முருகன் வாசித்தார். மாவட்டப் பொறுப்புச் செயலாளர் டி.ஏ.மாதேஸ்வரன் மாநாட்டுக் கொடியேற்றித் துவக்க உரை ஆற்றினார். மாவட்டச் செயலாளர் சு.மோகன்குமார், பி.எல்.சுந்தரம் எக்ஸ் எம்எல்ஏ, மாவட்டத் துணைச் செயலாளர் கே.சக்திவேல், கலை இலக்கியப் பெருமன்றம் திருப்பூர் குணா

ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இதில் ஒன்றியச் செயலாளராக எம்.சுரேந்தர், துணைச் செயலாளர்களாக சி.சிவானந்தம், பி.டி.சந்திரன், பொருளாளராக ஜெ.லட்சுமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**கே.வி.குப்பம் ஒன்றியம்:** கே.சி.திருநாவுக்கரசு, பி.விமலா, கணேஷ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மூத்த தோழர் எஸ்.சி.கஜேந்திரன் கொடியேற்றினார். அஞ்சலித் தீர்மானத்தை இரா.பிச்சமுத்து முன் மொழிந்தார். என். அகிலன் வரவேற்றுப் பேசினார். வேலை அறிக்கை சமர்பித்து ஒன்றியச் செயலாளர் துரை செல்வம் பேசினார். மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் சிறப்புரை ஆற்றினார். மூத்த தோழர்கள் ஏ.சி.சாமிகண்ணு, எஸ்.சி.கஜேந்திரன், சி.எஸ்.சுப்பிரமணி, ஜனசக்தி ஜெயராமன் ஆகியோருக்குச் சால்வை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. மாநிலக் குழு உறுப்பினர் எல்.மணி, ஒன்றியச் செயலாளர்கள் டி.ஆனந்தன், கே.சி.பிரேம்குமார், வே.குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

செயலாளராக இரா.பிச்சமுத்து, துணைச் செயலாளர்களாக கே.சி.திருநாவக்கரசு, என்.அகிலன். பொருளாளராக ஜி.தன்ராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். நிறைவாக மாவட்டச் செயலாளர் ஜி.லதா நிறைவுரை ஆற்றினார்.


கே.வி.குப்பம்


திருவில்லிப்புத்தூர்


திருவில்லிப்புத்தூர்


சத்தியமங்கலம்



திருவெறும்பூர்


சிவகாசி

## சாதி, மத மறுப்புத் திருமணம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தென் சென்னை மாவட்ட அலுவலகமான ஜீவா இல்லத்தில், கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா தலைமையில், ரா.ஆனந்தி–முகமது பரித் ஆகியோரின் சாதி, மத மறுப்பு, காதல் திருமணம் நடைபெற்றது. இது தென் சென்னையில் நடைபெற்ற 43வது காதல் திருமணமாகும்.

இதில் இளைஞர் பெருமன்றத்தின் முன்னாள் அகில இந்தியப் பொதுச் செயலாளர் இரா.திருமலை, கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் ஜோதி மனோகரன், சைதாப்பேட்டை தொகுதிச் செயலாளர் டி.சி.கே.சுந்தரம், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்டச் செயலாளர் செளமியா, மாணவர் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் மணிகண்டன், இஸ்கப் ஜனனி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

### கோவில்பட்டி அருகே

## ஆட்டோ ஓட்டுநரைத் தாக்கியவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை




கோவில்பட்டி அருகே வானரமுட்டியைச் சேர்ந்த ஏ.ஐ.டி.யு.சி ஆட்டோ சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மாவட்டச் செயலாளர் பாபு தலைமையில் டி.எஸ்.பி அலுவலகத்தில் வழங்கிய மனு விவரம்: வானரமுட்டி ஏ.ஐ.டி.யு.சி ஆட்டோ சங்கச் செயலாளர் மாரித்துரை வீட்டுக்குக் கடந்த 12ம் தேதி மாலை 4 மணிக்கு வந்த 20 பேர் கொண்ட கும்பல், அவரை அவதூறாகப் பேசி கடுமையாகத் தாக்கியுள்ளனர். காயமடைந்த மாரித்துரை சிகிச்சைக்காகக் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தாக்குதல் நடந்த மறுநாள் 13ம் தேதி வந்த நாலாட்டின் புதூர் போலீஸார் மாரித்துரையிடம் புகார் பெற்றுச் சென்றுள்ளனர். ஆனால், இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. யாரையும் கைது செய்யவுமில்லை. மாரித்துரைக்குத் தொடர்ந்து கொலை மிரட்டல் வருகிறது. எனவே, ஏ.ஐ.டி.யு.சி ஆட்டோ ஸ்டாண்ட் சங்கச் செயலாளர் மாரித்துரையைத் தாக்கியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் நகர உதவிச் செயலாளர் அலாவூதின், மாதர் சங்க நகரச் செயலாளர் விஜயலட்சுமி, இளைஞர் பெருமன்ற நகரச் செயலாளர் செந்தில் ஆறுமுகம், சிபிஐ கிளைச் செயலாளர் சீனிவாசன் மற்றும் ஏ.ஐ.டி.யு.சி ஆட்டோ சங்கத்தினர் சங்கரன், அய்யாசாமி, சுரேஷ்குமார், அருணாச்சலம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## தியாகச்செம்மல் கே.பாலதண்டாயுதம் 52வது நினைவேந்தல்





தியாகச்செம்மல் கே.பாலதண்டாயுதம் 52வது நினைவேந்தல், அவர் பிறந்த பொள்ளாச்சிக்கு அருகேயுள்ள மாக்கினாம்பட்டியில் ஊர்ப் பொதுமக்கள், மாக்கினாம்பட்டி ஊராட்சி மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோவை மாவட்டக் குழு சார்பில் நடைபெற்றது. முன்னதாக மாக்கினாம்பட்டி கிராமத்தில் அஞ்சலி ஊர்வலம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஊராட்சியின் மேனாள் தலைவர் பி.செல்வக்குமார் தலைமையேற்று, மாக்கினாம்பட்டியின் பிரதான சாலையை கே.பாலதண்டாயுதம் சாலை எனப் பெயரிடுவதற்கு உரிய முன்முயற்சியை எடுக்கவுள்ளதாகவும் அறிவித்தார்.

அஞ்சலி நிகழ்வில் கட்சியின் மாநிலத் துணைச்செயலாளர் மு.வீரபாண்டியன், மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், கோவை மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, துணைச் செயலாளர் மௌ.குணசேகர், பொள்ளாச்சி தாலூகா செயலாளர் சண்முகம், மாக்கினாம்பட்டி எம்.மாணிக்கம் மற்றும் அனைத்துக்கட்சித் தலைவர்கள், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத் தோழர்கள், ஊர் மக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி வாகன ஓட்டுநர் இறப்பிற்குப்

## போராடி இழப்பீடு பெற்றுத் தந்தது ஏஐடியூசி

தூத்துக்குடி பாரத் பெட்ரோலியம் சிலிண்டர் நிரப்பும் ஆலையில் இருந்து சமையல் எரிவாயு ஏற்றிச் செல்லும் வாகன ஓட்டுனர், தூத்துக்குடி ஆலையில் இறந்ததைத் தொடர்ந்து, அவருக்கான இழப்பீட்டுத் தொகை கோரி, ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் லோகநாதன், பொருளாளர் பாலசிங்கம், எஸ்.பி.ஞானசேகர், சட்ட ஆலோசகர் முத்துலெட்சுமி ஆகியோர் ஆலை முன்பு முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

அதைத் தொடர்ந்து காவல்துறையினர் கைது செய்து காவலில் வைத்தனர். பின்னர் இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்தப் போராட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் கரும்பன் பங்கேற்று வழிகாட்டினார். இதில் ஓட்டுநர்களும், ஒப்பந்தப் பணியாளர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில்

## ‘நிறைந்தது மனம்’ நிகழ்ச்சி



மயிலாடுதுறை மாவட்டத்தில் இரு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளியை நிறைந்தது மனம் என்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் எச்.எஸ்.ஸ்ரீகாந்த் கலந்துரையாடி, ரூ.50 ஆயிரத்திற்கான வைப்புத் தொகைக்கான ஆணையை வழங்கினார்கள். மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியராக அலுவலகக் கூட்டரங்கில் மாவட்டச் சமூக நலத்துறை சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒரு குழந்தைக்குத் தலா ரூபாய் 25,000 வீதம், இரண்டு பெண் குழந்தைகளுக்கு ரூபாய் 50 ஆயிரத்திற்கான வைப்புத் தொகை ஆணையை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி, இத்திட்டத்தினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனப் பயனாளிக்கு அறிவுரை வழங்கினார்கள்.

## பொதுப்பாதை ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி ஆர்ப்பாட்டம்

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை ஒன்றியத்தில், அய்யலூர் தும்னி குளம் குறித்த உயர் நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்தக் கோரியும், மோலபாடியில் காத்துக்கொண்டே நகர் பொதுப்பாதை ஆக்கிரமிப்பை அகற்றக் கோரியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன், மாவட்டக் குழு உறுப்பினர் பி.கிருஷ்ணசாமி, ஒன்றியச் செயலாளர் பி.தெய்வேந்திரன், மாவட்டக் குழு உறுப்பினர் எம்.என்.சாமிநாதன், ஒன்றிய துணைச் செயலாளர் டி.குமரேசன், கே.செல்வராஜ், விதொச டி.திருமுருகன், கிளைச் செயலாளர் ஆர்.பாலகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவு மன்றத் தலைவர் மறைவு

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவு மன்றம் உள்ளது. இதன் தலைவராகச் செயல்பட்ட ஜி.வீரையா வயது மூப்பின் காரணமாகக் காலமானார். தகவலறிந்து சிபிஐ மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி, மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், நகரச் செயலாளர் விஜயன் உள்ளிட்டோர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

### பள்ளிக் கல்வி தூய்மைப் பணியாளர் சங்கம் சார்பில்

## பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்




தருமபுரி மாவட்ட ஏஜடியூசி பள்ளிக் கல்வி தூய்மைப் பணியாளர் சங்கம் சார்பில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, சங்க மாவட்டத் தலைவர் சுப்பு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம், ஏஜடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் கே.மணி, மாவட்ட துணைச் செயலாளர் என்.மனோகரன், ஆஷா பணியாளர் சங்க மாவட்டச் செயலாளர் எஸ்.மேனகா, கட்டுமானச் சங்கப் பெண்கள் அமைப்பு மாவட்டச் செயலாளர் முனியம்மாள், பள்ளிக் கல்வி தூய்மைப் பணியாளர் சங்க மாவட்டச் செயலாளர் எம்.செல்வி, மாவட்டப் பொருளாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார்கள்.

இதில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி, உயர் நிலைப் பள்ளி, ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு நான்கு வகையான மாத ஊதியம் வழங்கபடுவதை மாற்றி, அரசாணை 62/2டின் படி ஊதிய உயர்வு வழங்க வேண்டும். பிரதி மாதம் 5 ம் தேதி ஊதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

## விருதுநகர் நகராட்சி சீர்கேட்டைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்




விருதுநகர் நகராட்சி சீர்கேட்டைக் கண்டித்து, அனைத்துக் கட்சி மற்றும் மக்கள் போராட்டக் குழு சார்பாக, கண்டன ஆர்ப்பாட்டம் விருதுநகர் நகராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தைத் துவக்கி வைத்து, கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன் பேசினார். இதில் வடக்கு ஒன்றியச் செயலாளர் சக்கணன், நகரச் செயலாளர் பாண்டியன், மாதர் சம்மேளனத்தின் மாவட்ட தலைவர் மாரீஸ்வரி, நகரத் துணைச் செயலாளர் மாரியப்பன், மூத்த தோழர்கள் காளியப்பன், சுப்ரமணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### துணை மின் நிலையம் அமைக்க

## விவசாய நிலத்தைப் பறிப்பதைக் கண்டித்து காத்திருப்புப் போராட்டம்



தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் வடபாதி கிராமத்தில், துணை மின் நிலையம் நிறுவிட, தமிழ்நாடு மின் தொடர் அமைப்புக் கழகத்திற்கு வேளாண் நிலங்களை வழங்கிடும் நடவடிக்கையைக் கைவிடக் கோரியும், விவசாயிகளுக்குப் பட்டா வழங்கக் கோரியும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பாக, கும்பகோணம் சார் ஆட்சியர் அலுவலகம் அருகில் தொடர் காத்திருப்புப் போராட்டம் ஒன்றியத் தலைவர் எஸ்.புருஷோத்தமன், ஒன்றியச் செயலாளர் குரு.சிவா தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட தலைவர் தங்க.சக்கரவர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர் ஆர்.செந்தில்குமார் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

விவசாயச் சங்கப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, மேற்படி வடபாதி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைவதை நிறுத்தம் செய்ய வேண்டும். மேற்படி துணை மின் நிலையம் அமைய உள்ள இடம் தொடர்பாக அ1 விளம்பரம் செய்யப்பட்டதில், அப்பகுதி விவசாயிகளுக்கு ஆட்சேபனை உள்ளது என மறுப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் பணிக்கு முன்மொழிவுகள் அனுப்புவது நிறுத்தப்பட்டுள்ளது என எழுத்துப்பூர்வமாக பாபநாசம் வட்டாட்சியர், தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையிலும், கும்பகோணம் சார் ஆட்சியர் 75 விவசாயக் குடும்பங்களுக்கும் பட்டா வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்ததின் அடிப்படையில் காத்திருப்புப் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

### இ.எஸ்.ஐ மருத்துவமனையை உடனே தொடங்க

## குமரி மாவட்ட 25வது மாநாடு வலியுறுத்தல்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் குமரி மாவட்ட 25வது மாநாடு நாகர்கோவிலில் சி.சொக்கலிங்கம், எஸ்.கே.கங்கா தலைமையில் நடைபெற்றது. கட்சிக் கொடியை மூத்த தோழர் வி.அருணாசலம் ஏற்றினார். மூத்த தோழர் வி.கோபாலகிருஷ்ணன் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினார்.

மாநாட்டை அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க.பாரதி துவக்கி வைத்தார். திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் அரசியல் விளக்க உரை ஆற்றினார். வேலை அறிக்கையை மாவட்டச் செயலாளர் தா.சுபாஷ்சந்திர போஸ் வாசித்தார்.

மாவட்டச் செயலாளராக தா.சுபாஷ்சந்திரபோஸ், மாவட்ட துணைச் செயலாளர்களாக எஸ்.அனில்குமார், ஜே.சுரேஷ் மேசியாதாஸ், மாவட்டப் பொருளாளராக பி.தாமரைசிங் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

முதியோர் உதவித்தொகையை எவ்வித நிபந்தனைகளுமின்றி அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். தொழிலாளர்கள் நலன் சார்ந்து ஒன்றிய, மாநில அரசுகள் இணைந்து இ.எஸ்.ஐ மருத்துவமனையை உடனே தொடங்கப்பட வேண்டும்.

TET தேர்வைக் கைவிட வேண்டும். குமரி மாவட்டத்தில் மூடப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## முத்துப்பேட்டை ஆர்.கோவிந்தராஜ் மறைவுக்கு சிபிஐ இரங்கல்

கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு :

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஒன்றியத்தின் மூத்த தலைவர் ஆர்.கோவிந்தராஜ் (75) 29.05.2025 அன்று அதிகாலையில் ரயில் விபத்தில் காலமானார். ஒன்றுபட்ட தஞ்சாவூர் மாவட்டம் எடையூர் கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த ஆர்.கோவிந்தராஜ், இளம்வயதிலேயேகம்யூனிஸ்ட் கட்சிநடத்திய இயக்கங்களால் ஈர்க்கப்பட்டு, கட்சியில் இணைந்து செயல்படத் தொடங்கியவர். தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தில் ஒன்றியச் செயலாளர் பொறுப்பில் நீண்ட காலம் செயல்பட்டவர். பரந்துபட்ட மக்களின் ஆதரவைத் திரட்டி, தொடர்பு இயக்கங்களை நடத்தி, பல முறை சிறை சென்ற அனுபவம் பெற்றவர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முத்துப்பேட்டை ஒன்றியச் செயலாளர், மாவட்டக் குழு உறுப்பினர் போன்ற பொறுப்பில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டவர்.

கோவிந்தராஜ் அவர்களுக்கு வித்யா என்ற மனைவியும், ரஷ்யா, வளர்மதி என இரண்டு மகள்களும், விஜயன் என்ற மகனும் உள்ளனர். அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## பணி நிறைவுப் பாராட்டு விழா



தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக திருவண்ணாமலை ஏஐடியூசி சங்கத்தின் மண்டலப் பொதுச்செயலாளர் வி.குப்புரங்கன் பணி நிறைவுப் பாராட்டு விழாவிற்கு ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் த.ராசேந்திரன் தலைமை தாங்கினார். மண்டலப் பொருளாளர் வி.விஸ்வநாதன் வரவேற்புரை ஆற்றினார்.

தமிழ்நாடு ஏஐடியூசி போக்குவரத்துத் தொழிலாளர் சம்மேளனத்தின் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் என்.முருகராஜ், ஏஐடியூசி மாநிலச் செயலாளர் ஆர்.தில்லைவனம், ஏஐடியூசி மாவட்ட தலைவர் வே.முத்தையன், கட்சியின் மாவட்டச் செயலாளர் இரா.தங்கராஜ், ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் எம்.எஸ்.மாதேஸ்வரன், எல்பிஎஃப் பொறுப்பாளர் குமார், தொழில்நுட்பப் பிரிவு நலச்சங்கத்தின் கிருபாகரன், சிஐடியு மூத்த தலைவர் சி.அப்பாசாமி கண்ணன், கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் கி.ஜீவானந்தம் ஆகியோர் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். இறுதியாக வி.குப்புரங்கன் ஏற்புரை நிகழ்த்தினார்.

■ தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் தஞ்சாவூர் நகர் கிளையில், 31 ஆண்டுகள் பணிபுரிந்து 31.5.2025 அன்று பணி ஓய்வு பெற்றுள்ள பரிசோதகர் டி.கஸ்தூரி பணி நிறைவு பாராட்டு விழா, அரசுப் போக்குவரத்து ஏஐடியுசி தொழிலாளர் சம்மேளனத்தின் மாநிலத் துணைத்தலைவர் துரை.மதிவாணன் தலைமையில் நடைபெற்றது. மத்திய சங்கத் தலைவர் என்.சேகர் வரவேற்புரை நிகழ்த்தினார். சம்மேளனத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் ஆர்.ஆறுமுகம், கட்சி மாவட்டச் செயலாளர் முத்துஉத்திராபதி, மார்க்சிஸ்ட் மாவட்டச் செயலாளர் சின்னை. பாண்டியன், அயனாபுரம் சி.முருகேசன், சிபிஎம்எல் இரா. அருணாச்சலம், ஏஐடியுசி சி.சந்திரகுமார், ஆர்.தில்லைவனம், கட்சி மாநகரச் செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினார்கள்.

## தியாகி செங்கம் ஆர்.ராமசாமி 12 ஆம் ஆண்டு நினைவு நாள்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மறைந்த முதுபெரும் தலைவர், விடுதலைப் போராட்ட தியாகி, செங்கம் ஆர்.ராமசாமி அவர்களின் 12ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, எஸ்.சர்தார் தலைமையில் புகழ் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இதில் தோழர்கள் எஸ்.ராஜா, கே.அப்துல் மஜீத், எம்.எஸ்.மாதேஸ்வரன், ஆர்.எம்.ஜக்கரியா, ஆர்.ஆர்.அவர்களின் குடும்பத்தார் மருமகன் ஜோஸ்வா, மகள் அருணா, பேத்தி ஆகியோர் பங்கேற்றனர். செங்கம் ஆர்.ராமசாமி சமாதியிலும், அவருடைய திருவுருவப் படத்திற்கும் மலர்மாலை செலுத்தி வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

## நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப மருத்துவர் நியமனம்

### அரசு மருத்துவர்கள் ஆர்ப்பாட்டம்



தமிழகத்தில் நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப மருத்துவர்களை நியமனம் செய்யக்கோரி, அரசு மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில், சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் ஜனநாயக தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கத்தின் தலைவர் பாலகிருஷ்ணன், செயலாளர் செந்தில்குமார், அரசு மருத்துவர்கள் மற்றும் பட்ட மேற்படிப்பு மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் சாமிநாதன், பொதுச்செயலாளர் ராமலிங்கம், தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கத்தின் தலைவர் கார்த்தீஸ்வரன், பொதுச்செயலாளர் அகிலன், அரசு அனைத்து டாக்டர்கள் சங்கத்தின் செயலாளர் சக்திகுமார் உள்பட 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

சமூக சமத்துவத்துக்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று ஆதரவு தெரிவித்தார். அப்போது அவர் கூறியதாவது, மறைந்த தமிழக முதல்வர் கருணாநிதி ஆட்சியில் 2009ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட அரசு ஆணை 354ஐ மறுசீராய்வு செய்து, அரசு மருத்துவர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும். ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்குப் படித்தொகை ரூ.3,000 உடனடியாக வழங்க வேண்டும். அரசு ஆணை 4 (டி) மூலம் நீக்கப்பட்ட 1,500க்கும் மேற்பட்ட மருத்துவக் கல்லூரி பதவிகளை மீண்டும் கொண்டுவர வேண்டும். நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டும். இந்தக் கோரிக்கைகளுக்காகக் கடந்த 8 ஆண்டுகளுக்கு மேலாகப் போராடும் அரசு மருத்துவர்களின் குரலுக்குச் செவிமடுத்து, தமிழக முதல்வர் உடனடியாக அழைத்துப் பேசி சுமூகச் தீர்வு காண வேண்டும் என்று தெரிவித்தார்.

## ஜூலை 9 பொது வேலை நிறுத்தத்தை விளக்கி அனைத்துத் தொழிற்சங்கம் தெருமுனைக் கூட்டம்

**அரியலூர்:** மாவட்ட அனைத்துத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு சார்பில், ஏஐடியுசி மாவட்டப் பொதுச்செயலாளர் டி.தண்டபாணி, தொமுச மாவட்ட கவுன்சில் செயலாளர் ஆர்.மகேந்திரன், சிஐடியு மாவட்டச் செயலாளர் பி.துரைசாமி, ஐஎன்டியுசி மாவட்டத் தலைவர் டி.விஜயகுமார் ஆகியோர் தலைமையேற்று உரையாற்றினார்கள்.

**திருச்சி:** அனைத்து மத்தியத் தொழிற்சங்கங்கள் சார்பில், திருச்சி மாநகரில் ஏஐடியுசி மாவட்ட தலைவர் வே.நடராஜா தலைமையில் நடைபெற்றது. தொமுச பேரவை மாநிலச் செயலாளர் எத்திராஜ், ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் க.சுரேஷ், சிஐடியூ மாவட்டச் செயலாளர் ரங்கராஜ், ஏஐசிசிடியூ மாநிலச் செயலாளர் தேசிகன், எல்எல்எப் தொழிற்சங்க மாவட்டச் செயலாளர் தெய்வீகன், யூடியூசி மாவட்டச் செயலாளர் சிவச்செல்வன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.






**ஜெயங்கொண்டம்:** ஜெயங்கொண்டம் காந்தி பூங்கா அருகில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் டி.தண்டபாணி, தொமுச மாவட்ட கவுன்சில் செயலாளர் ஆர்.மகேந்திரன், சிஐடியு மாவட்டச் செயலாளர் பி.துரைசாமி ஆகியோர் தலைமையேற்று உரையாற்றினார்கள்.

## இந்திய மாதர் தேசிய சம்மேளன தென் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம்



இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தென் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் மதுரையில் பா.ராஜலெட்சுமி தலைமையில் நடைபெற்றது. மாதர் சங்க மாநிலச் செயலாளர் மு.கண்ணகி மாதர் சங்கத்தின் சார்பாக, கட்சியின் மாநில மாநாட்டிற்காக, மாதர்களின் செந்தொண்டர் அணி அமைப்பது குறித்து விளக்கமளித்தார். மாதர் சங்கத்தின் கன்வீனர் பா.ராஜலெட்சுமி செந்தொண்டர் அணி எவ்வாறு செயல்படவைப்பது என விளக்கினார்.

மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் ஆர்.மணிமேகலை, சிவகங்கை மாவட்ட தலைவர் கே.மஞ்சுளா, நெல்லை மாவட்டச் செயலாளர் பி.சபியா, விருதுநகர் மாவட்டச் செயலாளர் ஏ.பாண்டிச்செல்வி, திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் எம்.சாந்தி, தேனி மாவட்டச் செயலாளர் ஏ.அழகேஸ்வரி உட்பட தென் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சேலம் சீலநாயக்கன்பட்டி தோல்சாப் போராட்டம்


ப.பரமசிவம்

**சேலம் மாநகரத்திற்கு ஒட்டிய பகுதி சீலநாயக்கன்பட்டி கிராமம். காட்டூர், கரட்டூர், நாட்டாமங்கலம், கொண்டலாம்பட்டி, தாசநாயக்கன்பட்டி, நாளிக்கல்பட்டி, கொழிஞ்சிபட்டி, வெடிகாரந்தெரு, சந்தயூர், மல்லூர் இந்த கிராமங்களில் அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கிளைகள் இருந்தன.**

இந்தக் கிளைகளை ஒன்றுபடுத்தி சீலநாயக்கன்பட்டி பிரதேச கமிட்டியாகச் செயல்பட்டது. இப்போது சீலநாயக்கன்பட்டி சேலம் மாநகராட்சிக்குள் வந்துவிட்டது. மீதி கிராமங்களை ஒன்றிணைத்து பனமரத்துப்பட்டி ஒன்றியக் குழுவாகச் செயல்படுகிறது.

1960க்கு முன்னாள் சேலம் சீலநாயக்கன்பட்டி பைபாஸ் அருகில் தோல்சாப் ஒன்று செயல்பட்டது. காரைக்குடியைச் சார்ந்த நாகப்ப செட்டியார் நடத்தி வந்தார். அவர் தமிழ்நாட்டில் பெரிய தொழிலதிபர்.

அந்தத் தோல்சாப் மன்னர்கள் காலத்து கோட்டையைப் போல் ஒழுங்குபடுத்தபட்ட கருங்கல்லில் கட்டப்பட்டிருந்தது. அந்தத் தோல்சாப்பைப் பார்த்து அன்றைய மக்கள் அதிசயமாகப் பார்த்தார்கள். இந்தக் கோட்டையைக் கட்டிய முதலாளி பொண்டாட்டி, ஒரு முறை இந்த தோல்சாப்பை பார்த்துவிட்டு இதென்ன எனது அப்பா வீட்டுக் குதிரைக் கொட்டாய் மாதிரியல்லவா இருக்கு என்று கூறினாராம். அப்ப இந்த முதலாளியினுடைய மாமனார் வீடு எவ்வளவு பெரும் முதலாளியாக இருப்பார் என்று மக்கள் பேசிக் கொள்வார்கள்.

மேலும் அந்தத் தோல்சாப்பில் பணிசெய்யத் தெரிந்தவர்கள் சேலத்தில் யாரும் இல்லை, திண்டுக்கல்லில் இருந்துதான் தொழிலாளர்களை இறக்குமதி செய்வார்கள். அந்த பேக்டரியில் 100 க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்தார்கள். அனைவரும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள். அதில் 50 பேர்கள்தான் நிரந்தரத் தொழிலாளர்கள் 50 பேர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்கள். அவ்வளவு பேரும் அந்தத் தோல்சாப்புக்கு முன்னால் குடிசை போட்டு வாழ்ந்தார்கள். அவர்களோடு சேர்ந்து ஏஐடியுசி தொழிற்சங்கத் தலைவர் ஆர்.பி.அந்தோனி சாமியும் குடும்பத்தோடு குடியிருந்து அந்தத் தொழிலாளர்களைத் திரட்டி கோரிக்கைகளுக்காகப் போராடி வந்தவர். ஒரு காலகட்டத்தில் உழைத்துக் கொடுக்கும் தொழிலாளர்கள் குடிசையில் வாழவா? உழைப்பை உறிஞ்சும் முதலாளி கோட்டை கட்டி வாழவா? என்று கோஷம் போட்டு போராட்டத்தைத் தொடங்கிக் கடுமையாக ஆர்ப்பாட்டம், ஊர்வலம், உண்ணாவிரதமென்று பல போராட்டங்கள் நடத்தினார். அதற்கெல்லாம் தோழர்கள் எஸ்.எம். ராமையா, கே.செல்வராஜ், சிபிஐ சீலநாயக்கன்பட்டி பிரதேச கமிட்டி தோழர்கள் கே.கே.கருப்பண்ணன், பி.ஆனந்தன் சின்னமுத்து, இ.மாரியப்பன் போன்ற தலைவர்கள் உறுதுணையாக இருந்தார்கள். அந்தப் போராட்டத்தின் விளைவாக நிரந்தரத் தொழிலாளர்களுக்கு மட்டும் தோல்சாப் தொழிற்சாலையைப் போன்றே கருங்கற்களாலே 50 ரூம்கள் கட்டி அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது.



15 ஏக்கர் நிலப்பரப்பில் அந்தத் தோல்சாப் செயல்பட்டது. தோல் ஊறவைக்கும் தொட்டிகள் கட்டப்பட்டிருந்தன. தோல் ஊரவைக்க உப்பு, ஆவாரம்பட்டை, கடுக்காய் மற்றும் கெமிக்கல் கலந்து தண்ணீரில் ஊறவைப்பார்கள். அதன் பிறகு அதை எடுத்து அதன் மேல் உள்ள மயிர்களைத் தேய்த்து எடுத்து விடுவார்கள். உள்பகுதியில் இருக்கும் ஜவ்வுப் பகுதிகளையும் கத்தியால் சீவி எடுத்துவிடுவார்கள். அதன் பிறகு சட்டத்தில் உள்ள கொக்கியில் தோலை மாட்டிக் காய வைப்பார்கள். அந்தத் தொட்டித் தண்ணீரைத் திறந்துவிட்டு அங்கேயே பெரிய குட்டையில் விட்டு விடுவார்கள். தோலில் இருந்த ஜவ்வுகளைக் குட்டைக்குப் பக்கத்தில் குவித்து வைத்திருப்பார்கள். இந்த ஜவ்வுகளைச் சாப்பிடச் சுற்றுவட்டாரத்தில் 10 கி.மீ தூரத்திலுள்ள கிராமத்துத் தெருநாய்கள் வந்து சாப்பிட்டுச் செல்லும், முதலில் அந்த நாய்கள் கொழு கொழு வென்று இருக்கும். அதன் பிறகு சொறி பிடிக்கும் மயிரெல்லாம் கொட்டிச் சொட்டையாகி பார்க்கவே அருவருப்பாயிடும். பிறகு இறந்தே போய்விடும்.

தோல் ஊரவைத்த தண்ணீர் நிலத்தில் ஊரி அந்தப் பகுதியில் 10 கி.மீ துரத்திற்கு நிலத்தடி நீர் கெட்டுவிட்டது. அந்தத் தண்ணீர் குடிக்க முடியாது, வெலக்கெண்ணெய் மாதிரி இருக்கும், தண்ணீரோ இளம்சிவப்பு நிறத்தில் மாறி விட்டது. அந்தத் தண்ணீரில் குளித்தால் மயிர் உதிர்ந்துவிடும், பலவிதமான நோய்களும் வந்து மக்கள் அவதிப்பட்டார்கள்.

அந்தத் தோல்சாப் நிலத்திற்குப் பக்கத்தில் பச்சாயி என்ற குலதெய்வக் கோயில் இருந்தது. கோயிலைக் கும்பிடும் சீலநாயக்கன்பட்டியைச் சார்ந்த மண்டச்சியூட்டு குடும்பம் பெரிய குடும்பம். அவர்களில் சின்னமுத்து கந்தசாமி, வாமலை, ஆனமுத்து போன்றோர் கம்யூனிஸ்ட்களுடன் சேர்ந்து அந்தத் தோல்சாப்பை மூட வேண்டும் கோரிக்கை வைத்துப் போராடினார்கள். அந்தப் போராட்டத்தில் எஸ்.எம்.ராமையா, செல்வராஜ், சாமுவேல் வழிகாட்டுதல்படி அந்தப் பகுதி முழுவதுமுள்ள பச்சியம்மன் குலதெய்வக் கோயில் குடும்பம் சீலநாயக்கன்பட்டி பிரதேசக் கமிட்டியைச் சார்ந்த பி.ஆனந்தன், பி.பழனி ஆர்.பி.அந்தோனிசாமி, இ.மாரியப்பன், பி.ராஜீ, கரட்டூர் கிருஷ்ணன் காட்டூர் முதலாளி குடும்பத்தைச் சார்ந்த பழனிசாமி, கந்தசாமி, சண்முகம், கே.பி.கல்யாணசுந்தரம், கே.பி.விஷ்வநாதன் கட்சியைச் சார்ந்த காந்தி, கிரிகட்டி கருப்பண்ணன் திண்ணக்காரமுத்து ராமையன் நகரைச் சேர்ந்த இ.கந்தசாமி, ஆ.நடராஜன், மணி, மாரியப்பன் இவர்களெல்லாம் ஒன்றிணைந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதல்படி தோல்சாப்பை அகற்ற ஆர்ப்பாட்டம் உண்ணாவிரதம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை ஆயிரக்கணக்கான மக்களைத் திரட்டி ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டம் செய்து மனுகொடுப்பது போன்ற பல வகையான போராட்டங்கள் செய்தும் எதுவும் நடக்கவில்லை. அந்த அளவிற்குத் தோல்சாப் முதலாளி காரைக்குடி நாகப்ப செட்டியார் மத்திய மாநில அரசுகளின் ஆட்சியாளர்களிடம் செல்வாக்குள்ளவர்.

இத்தனை போராட்டங்கள் நடத்தியும் தோல்சாப்பை எடுக்க முடியவில்லையே என்ற ஆதங்கத்தில் மக்கள் கோபமடைந்து ஒன்று திரண்டு கம்பிவேலி போட்டிருந்த காம்பவுண்ட்டை உடைத்துச் சேதபடுத்தி உள்ளே நுழைந்து தோல் ஊரவைக்கும் தொட்டிகளைச் சேதபடுத்த முற்படுகிற பொழுது காவல்துறை பறக்கும்படை வந்து மக்களை லத்தியால் அடித்து நொறுக்கியது. மக்களுக்கும் போலீசுக்குமான போராக மாறியது. பலபேருக்கு மண்டை உடைந்து கைகால் முறிவு கண்ணில் பட்டவர்களைக் கைது செய்தது மட்டுமல்லாமல் அந்தப் பகுதி கம்யூனிஸ்ட் தோழர்களைத் தேடித் தேடி பிடித்துக் கைது செய்து சிறையில் மாதக் கணக்கில் அடைத்துவிட்டார்கள். அந்தக் குடும்பங்கள் சாதாரண ஏழைக் குடும்பங்கள் தினம் வேலைக்குப் போனால்தான் வீட்டு அடுப்பு எரியும். கைது செய்யப்பட்ட குடும்பங்கள் பட்டினியால் வாடியது போலீஸ் பிடியில் சிக்காமல் இருந்த கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் அந்தப் பகுதி முழுதும் சேலம் நகரம் முழுதும் தினமும் உண்டியல் குலுக்கி அதில் வரும் பணத்தைச் சிறையில் உள்ளவர்கள் குடும்பத்தாருக்குக் கொடுத்து பகசியைப் போக்க உதவினார்கள்.

இந்தப் போராட்டம் பற்றி மாநிலக் கட்சிக்குத் தெரிவிக்கப்பட்டது. மாநிலக் கட்சித் தலைவர்களும் கவனத்தில் எடுத்துக்கொண்டு பாராளுமன்ற நமது கட்சி உறுப்பினர்களிடத்தில் கூறி, இந்திராகாந்தி பிரதமராக இருந்த பொழுது தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தோழர் எஸ்.ஏ.முருகானந்தம் இந்தப் போராட்டம் பற்றியும் அந்தத் தோல்சாப் கழிவுகளால் சுற்றுபுறச் சுகாதாரம் கெட்டு நீர் மற்றும் மண் மாசடைந்து மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதனால் மட்டுமல்ல, தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் உழைப்பைச் சுரண்டி அந்தப் பகுதியில் மண், காற்று, நீர் மாசை ஏற்படுத்தி மக்களைப் பல நோய்களுக்குச் சித்தரவதையாக்கி அதன் மூலம் கொள்ளை லாபமடைந்து தோல்சாப் முதலாளி நாகப்ப செட்டியார் தமிழ்நாட்டில் தொழில் நடத்தி அதில் வரும் லாபங்களை நமது நாட்டு வங்கிகளில் இருப்பு வைக்காமல் சுவிஸ் வங்கியில் ரூ.120 கோடி ரூபாயைப் போட்டு வைத்துள்ளார் என்று பேசினார்,

உடனே பிரதமர் இந்திராகாந்தி சுவிஸ் வங்கியில் போட்டுள்ள பணத்தை உடன் உள்நாட்டு வங்கியில் போட வேண்டும் இல்லையேல் அவர் நடத்தும் தொழில்களை ரத்து செய்யப்படும் என்று அறிவித்தார். ஆனால் பிரதமர் அறிவித்தபடி நடக்காததால் சேலம் சீலநாயக்கன்பட்டி தோல்சாப்பின் அங்கீகாரத்தை ரத்து செய்ததின் மூலம் தோல்சாப் மூடப்பட்டது.

அந்தப் பகுதி மக்கள் பெருமூச்சு விட்டார்கள். அதனால் அந்தப் பகுதி முழுதும் கம்யூனிஸ்ட் கட்சி வளர்ச்சியடைந்தது. தற்சமயம் இளைஞர்களைக் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சியாக உள்ளது. காரணம் அந்தப் பகுதியில் கைத்தறியாளர் போராட்டம், பெட்ஷீட் தறி நெசவாளர்கள் போராட்டம், சாயத் தொழிலாளர்கள் போராட்டம், தோல்சாப் போராட்டம் போன்று சுற்றுப்புறச் சுகாதாரத்தையும், நீர் மாசு, நில மாசு ஏற்படாதவாறும் பல போராட்டங்களை நடத்தியதால் அந்தப் பகுதியில் கட்சி வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 26வது மாநாடு ஆகஸ்டில் 15, 16, 17, 18 ல் நேரு கலையரங்கில் நடக்கிறது. மாநாடு சிறப்பிக்க அதன் செலவிற்காக அந்தப்பகுதி இளைஞர்களும்மாவட்ட முழுவதுமுள்ள கட்சிக் கிளைகளும் வீடு வீடாக மாநாட்டு நோட்டீஸ் கொடுத்து உண்டியல் வசூல் செய்து வருகிறார்கள். தமிழ்நாடு முழுதும் உள்ள கட்சி அணிகள் 26 வது மாநாட்டிற்கு அணி அணியாகத் திரண்டு வர வேண்டுகிறோம்.

செல்: 9442995040

## தமிழ்ஒளி ஆக்கங்கள்..

16 ஆம் பக்கத் தொடர்ச்சி

நிகழ்வுகளை நினைவுகூர்ந்தார். புதுவையில் தமிழ்ஒளியின் 'வீராயி காவியம்' கவிதை நாடகமாக அரங்கேற்றம் செய்யப்பட்டது பற்றியும் பேசினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வாழ்த்துரை வழங்கினார். தமிழ்ஒளியின் நூல்களைத் தொகுப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் அதற்காக மேற்கொண்ட செயல்பாடுகளை விவரித்தார். தமிழ்ஒளியின் படைப்புகளை சேகரித்துத் தந்த தோழர் சஞ்சீவி அவர்களின் மகன் சிவக்குமாரிடம் இருந்து தமிழ்ஒளி படைப்புகளுக்கான காப்புரிமையை நியூசெஞ்சுரி புத்தக நிறுவனம் கேட்டுப் பெற்றது குறித்து விளக்கினார்.

தமிழ்ஒளி தஞ்சையில் கரந்தைக் கல்லூரியில் பயின்றபோது அவர் தாழ்த்தப்பட்டவர் என்ற அடிப்படையில் இழிவாக நடத்தப்பட்டதையும், அவர் பாரதிதாசனிடம் சொன்ன பிறகு பாரதிதாசன் தமிழ்ஒளியை அழைத்துக்கொண்டு கரந்தைக்கு சென்று கடுமையாக நடந்துகொண்ட பின்னர், தமிழ்ஒளி மரியாதையாக நடத்தப்பட்டார் என்பதையும் எடுத்துரைத்தார்.

தமிழ்ஒளி ஆக்கங்கள் எனும் ஆறு தொகுப்பு நூல்களின் பதிப்பாசிரியர் பேராசிரியர் வீ.அரசு ஏற்புரை நிகழ்த்தினார். அப்போது, "கவிஞர் தமிழ்ஒளி என்று கூறுவதில் தனக்கு உவப்பில்லை என்றும் அவரைத் தோழர் தமிழ்ஒளி என்று விளிப்பதுதான் பொருத்தமானது. தமிழ்ஒளியின் ஆக்கங்களைத் தொகுப்பதற்குக் காரணம் அவர் ஒரு கம்யூனிஸ்ட் என்பதுதான். கம்யூனிஸ்ட்டாக இருந்தபோதும் அன்றைக்கு இந்தித் திணிப்பை எதிர்த்துக் கவிதைகளை எழுதியவர் தமிழ்ஒளி. மணிமேகலை காப்பியத்தைப் படித்து ஆராய்ச்சி முறையில் மாற்றி எழுதிப் பார்த்தவர். தமிழ்ஒளியின் முந்தைய சில பதிப்புகளில் நீ எந்தக் கட்சி என்று அவர் எழுதியிருந்ததை நீ எந்தப் பக்கம் என்று சிலர் திருத்திவிட்டார்கள். ஆனால் இந்தத் தொகுப்பில் அவர் எழுதிய வரிகளை அப்படியே வெளியிட்டிருக்கிறோம்" என்று வீ.அரசு கூறினார். தமிழ்ஒளியின் படைப்புகளைத் தேடி அலைந்தபோது அவர் தன்னைப் பற்றி நண்பரொருவருக்கு எழுதிய கடிதமொன்று கிடைத்ததாகவும் அந்தக் கடிதத்தில் இருந்த அரிய தகவல்களையும் வீ.அரசு பகிர்ந்துகொண்டார்.

நிறைவாக சிறைப்புரையாற்றிய நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, தான் சிறு வயதாக இருந்தபோது, சொந்த ஊரான மல்லாங்கிணறுக்கு நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம் புத்தகங்களை வீதிவீதியாக எடுத்து வந்து விற்றதையும் அதனால் தான் பயனடைந்ததையும் நினைவு கூர்ந்தார். புத்தகங்களைத் தேடி மக்கள் வரும் சூழலில்லாத நிலையில் மக்களைத் தேடி புத்தகங்களைக் கொண்டு சென்ற நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தின் சேவையை அவர் பாராட்டினார். தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சராக தான் இருந்த போது தமிழக அரசின் தகைசால் தமிழர் விருதுக்கு தோழர் இரா.நல்லகண்ணு அவர்களின் பெயரைப் பரிந்துரைத்துக் கையெழுத்திட்டதாகக் குறிப்பிட்டார். தமிழ்ஒளியின் கவிதைகள் சிலவற்றை வாசித்துக் காட்டியதோடு இவை அனைத்தையும் விரைவில் வாசித்து முடித்துவிடுவேன் என்றும் அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

முதலமைச்சர் ஏற்கெனவே அறிவித்தபடி தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ஒளி சிலை அமைக்கப்பட்டதை நினைவுகூர்ந்த அமைச்சர் தங்கம் தென்னரசு, தோழர் தமிழ்ஒளியின் ஆக்கங்கள் எனும் இத்தொகுப்புக்கு முழுமையாகப் பணியாற்றிய பேராசிரியர் வீ.அரசுக்கு பாராட்டுதல்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டார். பின்னர் நியூ செஞ்சரி புத்தக நிறுவனத்தின் பொது மேலாளர் எஸ்.சண்முகநாதன் நன்றி தெரிவித்தார்.

# தில்லியில் தமிழர்களின் வீடுகள் இடித்துத் தரைமட்டம்

## அதே பகுதியில் வீடு வழங்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

**புது தில்லி, ஜங்புரா பி பஸ்தி பகுதியில் உள்ள 'மதராசி கேம்ப்' தமிழர்கள் குடியிருப்பு வீடுகள் அனைத்தையும், டெல்லி பாஜக அரசு இடித்துத் தரை மட்டமாக்கியுள்ளது.**

அந்த இடத்துக்கு நேரில் சென்று, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் டாக்டர் கே.நாராயணா, டெல்லி மாநிலச் செயலாளர் பேராசிரியர் தினேஷ் வர்ஷ்னி மக்களைச் சந்தித்துப் பேசினர்.

தமிழ்நாட்டிலிருந்து வந்து கடந்த 50 முதல் 60 ஆண்டுகளாக அங்கு அவர்கள் வசித்து வருகின்றனர். மிகவும் ஏழ்மையான நிலையில் இருக்கிறார்கள். தினசரி கூலிகள், வீட்டு வேலை செய்பவர்கள், துப்புரவுப் பணியாளர்கள், சிறு விற்பனையாளர்களாக அவர்கள் வேலை செய்து வருகிறார்கள்.

இப்போது பாஜக அரசு டெல்லியை அழகுபடுத்துவதாகக் கூறி ஆதரவற்ற நிலையில் இருக்கும் சாதாரண மக்களின் வீடுகளை இடித்து வருகிறது. மாற்றிடம் கொடுப்பதாகக் கூறி, அவர்களைத் தற்போதைய இடத்திலிருந்து 50 கி.மீ தூரத்திற்கு அப்பால் உள்ள நரேலாவுக்கு அனுப்ப விரும்புகிறது.

2024ம் ஆண்டில் டெல்லியில் தண்ணீர் தேங்கியதற்கு இந்தக் குடியிருப்புகள்தான் காரணம் என்று பொய்யான சாக்குச் சொல்லி, ஏழை மக்களின் குடிசைகள், கூடாரங்களை அகற்றுகிறார்கள். மெட்ரோ ரயில் கட்டுமானத்தின் காரணமாகத்தான் நீர் தேங்குகிறது என்பதை அவர்கள் மறைக்கிறார்கள்.

உண்மை என்னவென்றால், இந்த பஸ்தி பகுதி நிலத்தை, தமது நிறுவனக் கூட்டாளிகளிடம் ஒப்படைக்க பா.ஜ.க அரசு விரும்புகிறது.

பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்து வந்த பின்பு, இந்த ஏழை மக்களின் வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் அவர்களின் குழந்தைகளின் கல்வியைக் காப்பாற்ற இதே பகுதியில் அடுக்குமாடிக் கட்டிடங்களைக் கட்டி அவர்களுக்கு வீடுகளை வழங்க வேண்டும் என்று பாஜக அரசை டாக்டர் கே.நாராயணா வலியுறுத்தினார்.





இந்தப் பகுதியில் குடியிருக்கிற எஸ்சி, எஸ்டி மக்கள் அகற்றுவதன் மூலம், அவர்கள் மீதுள்ள ஒவ்வாமையை இந்துத்துவா பாஜக அரசு வெளிப்படுத்துகிறது என்று அவர் குற்றம்சாட்டினார்.

பாஜக பண்டைய இந்தியாவின் மன்னர்களைப் போல நடந்து கொள்கிறது. டெல்லியின் இந்த ஏழ்மையான குடிமக்களுக்கு ஆதரவாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டம் தொடரும் என்று அவர் தெரிவித்தார்.

---

### கல்வி உரிமைச் சட்டத்திற்கு நிதி வழங்க தமிழ்நாடு அரசை வலியுறுத்தி

## மாணவர் பெருமன்றம் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்!







கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 இன் கீழ் தனியார் பள்ளிகளில் பயின்று வரும் ஏழை எளிய மாணவர்களுக்கு வழங்கப்படும் 25 சதவீத இட ஒதுக்கீட்டை உறுதி செய்ய வலியுறுத்தியும், 25 சதவீத இட ஒதுக்கீடுக்கான நிதியை ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் ஒதுக்க வேண்டும் என்று கோரியும், ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்குத் தர வேண்டிய கல்வி நிதியை உடனடியாக வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியும், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் சார்பில் தமிழ்நாடு தழுவிய அளவில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

மேலும் போராட்ட விவரங்கள் மற்றும் படங்கள் அடுத்த இதழில் வெளியாகும்.

---

### ஏ.ஐ.எஸ்.எப் போராட்டம் வெற்றி:

## 20 மாணவர்களின் கல்விச் சான்றிதழ் பெற்றுத் தரப்பட்டது!



கேரளாவைச் சேர்ந்த அஸ்னா என்ற மாணவி நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் அன்பு நர்சிங் கல்லூரியில் இளங்கலை நர்சிங் முதலாம் ஆண்டு படித்து வருகிறார். கல்லூரி நிர்வாகம் அதிகப்படியான கட்டணத்தை வசூலித்தும்கூட தரமான கல்வியை மாணவர்களுக்குத் தர முடியாத கட்டமைப்போடு செயல்பட்டு வருகிறது. இப்படித் தொடர்ச்சியாக வகுப்புகள் செயல்படாத சூழல், போதுமான ஆசிரியர்கள் இல்லாத நிலை, விடுதியில் தரமில்லாத உணவு எனப் பல பிரச்சனைகளை மாணவர்கள் சந்தித்து வருகின்றனர்.

இதனால் பாதிக்கப்பட்ட மாணவி தனது படிப்பை இடைநிற்றல் செய்து கொண்டு அடுத்தகட்ட முயற்சியை நோக்கிச் செல்வதற்காகத் தனது கல்விச் சான்றிதழ்களைக் கேட்டபொழுது, கல்லூரி நிர்வாகம் 4 வருடங்களுக்கான மொத்தத் தொகையையும் செலுத்தினால்தான் சான்றிதழ்கள் தர முடியும் என்று கூறிச் சான்றிதழ்களை மறுத்து வந்தது. கல்லூரியின் இந்த முடிவு யுஜிசியின் வழிகாட்டு விதிமுறைகளுக்கும், உயர் நீதமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற உத்தரவுகளுக்கு முற்றிலும் எதிரானது. மாணவி அஸ்னா சான்றிதழ்களைப் பெற 1 மாதகாலம் அலைந்த நிலையில் எந்த முடிவும் கிடைக்கவில்லை.

இதைத்தொடர்ந்து மாணவி அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தை அணுகினார். அனைத்திந்திய மாணவர் பெருமன்ற தோழர்கள் கல்லூரி நிர்வாகத்திடம் மாணவி கல்விச் சான்றிதழைக் கோரிய போது கல்லூரி நிர்வாகத்தினர் தர மறுத்தனர்.

இதைத்தொடர்ந்து அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் சார்பில் மாநிலத் துணைத் தலைவர் சினேகா தலைமையில் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. இதில் மாநிலச் செயலாளர் பா.தினேஷ், தோழர்கள் அமுல் உன்னிகிருஷ்ணன், அரவிந்த், புவனேஸ்வர், நரேந்திர பிரசாத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் இப்போராட்டத்திற்கான அறிவிப்பு முன்னதாக சமூக வலைதளங்களில் விளம்பரம் செய்யப்பட்டது. இதைப் பார்த்து அன்பு கல்லூரி நிர்வாகத்தால் சான்றிதழ்கள் மறுக்கப்பட்டுத் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்த 20க்கும் மேற்பட்ட மாணவர்களும் போராட்டத்தில் பங்கேற்றனர். போராட்டத்தின் விளைவாக அனைவருக்கும் கல்விச் சான்றிதழ்கள் பெற்றுத் தரப்பட்டது.

JANASAKTHI TAMIL WEEKLY CELL: 9444331138
DAY OF PUBLICATION: EVERY THURSDAY
Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

## மாவோயிஸ்டுகள் மீதான போலி மோதல் படுகொலைகளை நிறுத்து!

# நீதி விசாரணை கோரி இடதுசாரிகள் ஆர்ப்பாட்டம்



**சத்தீஸ்கர் மாநிலத்தில், நக்சல் ஒழிப்பு என்ற பெயரில் ஒன்றிய மாநில பாஜக அரசுகள், போலி மோதல் படுகொலைகளை நிகழ்த்தி வருகின்றன.**

இதனைக் கண்டித்தும் நீதி விசாரணை நடத்தக் கோரியும் சென்னை, ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகே ஜூன் 2 ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, சிபிஐ (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) லிபரேசன் ஆகிய கட்சிகள் சார்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் உரையாற்றிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், "கார்ப்பரேட் முதலாளிகளுக்கு ஆதரவாக ஒன்றிய அரசு இந்தப் படுகொலைகளை நிகழ்த்தி வருகிறது. ஒன்றிய அரசின் மாவோயிஸ்ட் அழித்தொழிப்பு நடவடிக்கைக்கு எதிராக இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதல் எதிர்ப்புக் குரல் எழுந்துள்ளது. இந்த எதிர்ப்புக் குரல் நாடு முழுவதும் பரவும்" என்றார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் பேசும் போது, "சத்தீஸ்கர் மாநிலத்தில் நிறைந்துள்ள கனிம வளங்களை பன்னாட்டு, உள்நாட்டு கார்ப்பரேட் பெருநிறுவனங்களுக்குத் தடையின்றி தாரைவார்க்கவே மாவோயிஸ்ட் அழித்தொழிப்புக் கொள்கையை ஆட்சியாளர்கள் கடைப்பிடித்து வருகின்றனர். தங்களுக்குப் பிடிக்காதவர்களை எல்லாம் அழித்தொழிப்பது என ஆட்சியாளர்கள் முடிவெடுத்தால், இந்தியா ஜனநாயக நாடாக இருக்காது. பாஜக அரசின் வெறுப்பு அரசியலின் ஒரு பகுதியாகவே மாவோயிஸ்ட் அழித்தொழிப்பு நடந்து வருகிறது" என குற்றம்சாட்டினார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் பேசும் போது, "இந்திய ஒன்றிய அரசு, நக்சல் அழிப்பு என்று கூறினாலும், இது பழங்குடி மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறையாகும். உள்நாட்டு மக்களை நசுக்கும் நடவடிக்கை. எனவே தான், ஒன்றிய உள்துறை அமைச்சர், 'ஆபரேசன் காகரை' கைவிட வேண்டும். நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சனையை எழுப்புவோம். தேசிய அளவில் ஜனநாயக சக்திகளை இடதுசாரிகள் ஒருங்கிணைத்து வருகிறார்கள். அவர்களோடு இணைந்து அடுத்தகட்ட நடவடிக்கைக்குச் செல்வோம்" என்றார்.

சிபிஐ(எம்.எல்) லிபரேஷன் மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி பேசும் போது, "காடு, மலைகளில் உள்ள கனிம வளங்களை முதலாளிகளுக்கு கொடுக்க மாவோயிஸ்டுகள் தடையாக உள்ளதால்,




இத்தகைய ஒடுக்குமுறையை ஒன்றிய அரசு ஏவியுள்ளது. இந்திய அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாக்க வேண்டிய ஒன்றிய அரசே, அதனை மீறி செயல்படுகிறது. இதனைக் கைவிட்டு அரசியல் ரீதியாகப் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும்" என கேட்டுக்கொண்டார்.

# 'தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்' நூல் வெளியீட்டு விழா






"தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்" நூல் வெளியீட்டு விழா 30.5.2025 அன்று சென்னை பெரியார் திடலில் நடைபெற்றது. ஆறு தொகுதிகள் அடங்கிய இந்நூல் தொகுப்பை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு பெற்றுக்கொண்டார்.

விழாவின் முதல் நிகழ்வாக மரப்பாச்சி குழுவினரின் 'தமிழ்ஒளி உலகம்' எனும் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தமிழ்ஒளியின் பாடல்கள், நாடகங்கள் ஆடல் பாடல் இடம்பெற்றது. இந்நிகழ்வை பேராசிரியர் அ.மங்கை தமது குழுவினருடன் திறம்பட இயக்கியிருந்தார். நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் க.சந்தானம் வரவேற்றுப் பேசினார்.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் தலைவரும் மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவருமான த.ஸ்டாலின் குணசேகரன் தலைமை உரையாற்றினார். மிகக் குறைந்த வயதே வாழ்ந்த தமிழ்ஒளியைப் பற்றிக் குறிப்பிட்டதோடு அவரது படைப்புகள் பெருமளவில் தொகுக்கப்படுவதற்கு துணையாய் இருந்த சஞ்சீவி குறித்தும், தமிழ்ஒளியின் ஆராய்ச்சிப் பார்வை மற்றும் சமகால அரசியல் தெளிவு குறித்தும் எடுத்துரைத்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதுச்சேரி மாநிலச் செயலாளர் மு.சலீம் பேசும்போது, புதுவையில் கடந்த ஆண்டு தமிழ்ஒளி நூற்றாண்டு தொடங்கியபோது புதுவை அரசின் சார்பில் கொண்டாடப்பட்ட

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.